
www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE FRANCE

# மனிதம்



நாளும் நாளும் சிதைக்கப்படும் கரங்கள்
அராஜகப் பத்திரிகைகளாய்!

நவ-டிச.89

2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதம்

ஆரம்ப பனிக்குளிரில்
இலை உதிர்த்த
பூ மரங்கள்

காலையிலிருந்து
மாலை இருட்டு வரை,
ஆலை மெசின்களுடன்
போராடி
சோர்ந்து போன
உடலோடு,
வீடு வந்து
சேர்கையில்;

வண்ண வண்ண
காட்டுகள்
மேசையில்
அத்தனையும்
தள்ளி விட்டு

அக்காவின்
கடிதத்தை
உடைக்கின்றேன்

அன்புடன் தம்பிக்கு!
நான் சுகமே
நீ எப்படி ?

இங்கு
திரும்பிய பக்கம்
எல்லாம் A·K·47.

அக்காவுக்கு
ஆண்குழந்தை,
எதிர்வீட்டு
பாமாவுக்கு
கனடா மாப்பிள்ளை,

கடைப் பாலனுக்கு
ஏழு லட்சம் பணயம்,
மற்றும்
உயிர்ப் பறிப்பு,
கற்பழிப்பு,
இன்னும்
Etc. Etc.....

கலா நேசன் *

# மனிதம்!



'செய்த கொலையின் அலுப்புத்தீர
இனித்தச் சாப்பிட்டுவிட்டு
யாதொரு கலக்கமும் இன்றி
சேமமாய் உறங்கும் உலகு'

மனித நேயத்தின்மேல் மீண்டும் ஓர் அடி விழுந்திருக்கிறது. கடந்த 21.9.89 அன்று மாலை நேரம்!. யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையை முடித்துவிட்டு கலாநிதி ராஜினி திரணகம (MBBS, PhD) வந்துகொண்டிருந்தார். தனது இரு பெண் குழந்தைகளையும் எண்ணியபடி அந்தத் தாய் வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தாள். காத்திருந்த பின் தொடர்ந்த அராஜகவாதிகளால் திடீரென வழிமறிக்கப்பட்டார் - சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் ஒரு விரிவுரையாளராக, தாயாக மட்டுமே இருந்திருந்தால் வாழ முடிந்திருக்கும். ஆனால் அவர் தன்னை உருவாக்கிய இந்த சமுதாயத்துக்காகச் சிந்தித்தார் - ஆம் எமது மக்களுக்காக! எமக்காக !! அதனால்தான் இந்தக் கதி.

இப்படியொரு விரிவுரையாளரை, ஒரு தாயை இழந்துவிட்டோமே என்று மாணவர்கள் கலங்குகிறார்கள்; இரு பெண் குழந்தைகளும் கதறுகின்றன.

www.tamilarangam.net

உரிமை கோரத் திராணியற்று , கருத்துக்களோடு மோத வழியின்றி ஒரு பெண் என்றுகூடப் பாராமல் மனிதாபிமானமே இல்லாமல் கொலை செய்யப்படுமளவிற்கு அவர் என்ன செய்தார் ???????...

ராஜினி திரணகம.

மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக இருந்த இவர் பின்னர் இங்கிலாந்தில் உடல்கூற்றியல் துறையில் (Anatomy) கலாநிதி பட்டம் பெற்று 3 வருடங்களுக்கு முன் நாட்டுக்குத் திரும்பினார். அதுவும் யாழ் பல்கலைக் கழகத்துக்கே திரும்பவும் வந்தார். எமது நாட்டு புத்திஜீவிகள் பலரும் நாட்டைவிட்டு வெளியே செல்லும்போது இவர் நாட்டுக்கு வந்தார் என்பதிலிருந்தே இவரின் சமூகப் பொறுப்புணர்வை நாம் புரிந்துகொள்ள முடியும். தனது கணவர் திரணகம தெற்கில் இருக்கவேண்டியிருந்த நிலையிலும் தனது இரு பெண் குழந்தைகளுடன் குடும்பச் சுமையையும் தாங்கிக்கொண்டிருந்த அந்த (35 வயது) தாய் திறமையிருந்த மருத்துவத் துறையில் அதுவும் உடற்கூற்றியல் துறையில் சேவையாற்றும் விரிவுரையாளராக மட்டும் இருக்கவில்லை. இன்றைய பாசிச சூழலிலும் ஒரு மனிதனாக அவர் வாழ்ந்ததே அவர் செய்த குற்றமாகப் போய்விட்டது. மக்கள் இக் கொடூரங்களைக் கூட அநியாயம் என்று சொல்லமுடியாத நிலையில் கூனிக் குறுகி நிற்கிறார்கள். எமது சமுதாயம் ஆரம்பத்திலிருந்தே தம்மிடமிருந்த ஜனநாயகக் கூறுகளை (அம்சங்களை) இயக்கங்களிடம் தாரைவார்த்துக் கொடுத்ததால் எழுந்துள்ள நிலைமையே இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவ்வாறான அவலநிலையிலுள்ள எமது சமுதாயத்தை தாக்கி நிறுத்தும் சமூகப் பாத்திரத்தில் ராஜினியும் ஒருவராகச் செயற்பட்டார். இதன் அடிப்படையில் இவர் இன்னும் இரு விரிவுரையாளர்களுடன் சேர்ந்து "Broken Palmyrah" (முறிந்த பனைமரம்) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப் புத்தகம் இன்றைய நிலைமைகளின் அனைத்து நின்று எழுதப்பட்டதாகவும் இச்சூழலின் சூத்திரதாரிகளான இயக்கங்கள், இந்திய ஆக்கிரமிப்பாளர்கள், இலங்கை அரசு ஆகியோர் மீதான விமர்சனப் பார்வையைக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையில் இன்றைய நிலைமைகளின் மீட்சிக்கான அவசியத்திற்கு இப் பணி தேவையாக இருந்தது. உயிருக்கு ஆபத்தான விடயம் எனத் தெரிந்துகொண்டும் சமுதாயத்தின் விரைவான தேவைக்காக இப் பெரும் பணியை துணிச்சலாக மேற்கொண்டார். இவ்வாறான சமுதாயப் பொறுப்புள்ள புத்திஜீவியாக அதுவும் எமது (இன்றைய) சமுதாயத்தில் மேலும் ஒடுக்கப் பட்டுள்ள பெண் சமூகத்திலிருந்து (இன்றைய சூழலில்) தோன்றுவது என்பது எளிதானதல்ல.

மேலும் ஆக்கிரமிப்பாளரின் அட்டூழியங்கள் வெளியுலகிற்கு தெரியவிடாமல் மூடி மறைக்கப்பட்டிருந்த நிலையில் "மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தை" உருவாக்கி 'அமைதிப்படையின்' அக்கிரமங்களை வெளியுலகுக்குக் கொண்டுவரப் பாடுபட்டார். மேலும் பெண்விடுதலையிலும் அக்கறை கொண்டிருந்தார். இயலுமானவரை அதற்காக பாடுபட்டார்

www.tamilarangam.net

1987 Oct. ராணுவ நடவடிக்கைகளின் பின் யாழ். பல்கலைக் கழகத்தை மீண்டும் திறக்கச் செய்வதில் மு-ன்னின்றார். இத்துணை வேலைப் பளுவுக்கு மத்தியிலும் உடல் அமைப்பியல் துறை ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தொடர்ந்து எழுதி வந்தார்.

பல்கலைக் கழகம் ஒரு வெறுமையான கல்விநிலையமாக இருக்கக்கூடாது என்றும் அது சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருக்கவேண்டும் என்றும் மனித உரிமைகள் மீறப்படுகையில் ஒரு கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.

தனது சக்திக்கு உட்பட்ட அளவில் செயற்பட்டார் - உழைத்தார். ஆயுதத்தை ஏந்தியதே "உயர் பங்களிப்பாக" உருமாறிப்போன சக்திகளுக்கு இந்தப் பணி தமது நோக்கங்களுக்கு எதிரானதாகப் பட்டிருக்கலாம். இது கொலைக்கான தூண்டுதலாய் அமைந்திருக்கலாம். அதே நேரம் இக் கொலை இன்றுமொரு சந்தேகத்தையும் விட்டுச் சென்றிருக்கிறது. சமூக நலனில் அக்கறை கொள்ளும் சிலர்களை மௌனிகளாக்கும் ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கலாம் என்பதே அது. பல்கலைக் கழக மாணவர்களின் இந்த ஊகமே நியாயமானது.

இன்று ராஜனி எமது சமுதாயத்துக்கு கிடைக்காமலே அழிக்கப்பட்டுவிட்டார். ஏதோ ஓர் இயக்கத்தால் கொல்லப்பட்டார் என்பது வெளிப்படை. எந்த இயக்கத்தால் கொல்லப்பட்டார் என்பதைவிட எந்த

www.tamilarangam.net

இயக்கம் முந்திக்கொண்டது என்பதே பொருத்தமான கேள்வியாகும். வெறும் சம்பிரதாயபூர்வமான அறிக்கைக ளுடனும், பரஸ்பரம் குற்றச்சாட்டுகளுடனும் இச் சம்பவத்- தை அவர்கள் கடந்துசென்றுவிட்டதிலிருந்தே இதைப் புரிந்துகொள்ளலாம்.

பத்தோடு பதினொன்றாக இதுபோன்ற கொ- லைகளையும் கணக்கெடுத்துவிட்டு சிந்தனைக்கு வேலை கொடாமல் வழமையான அலுவல்களில் மூழ்கும் பொறு- ப்பற்ற தன்மையும், அப்பாவித்தனமாக இச் சக்திகளு- க்கு ஆதரவு நல்குவதும் இதுபோன்ற கொலைகளு- க்கு நாம் மறைமுகமாக அனுமதி அளிப்பதுபோலா- கும். இனியாவது சிந்திப்போமா...... ?



யில் தொங்கும் எமது பகுத்தறிவையும் இழந்துவிடுவோமோ நாலிழை சமூகமானது எதுவித எதிர்ப்புமின்றி பலாத்காரத்திற்கும் பயங்கர வாதத்திற்கும் முற்றாக அடிபணிந்து விடுமோவெனவும் பீதியடைகிறோம். எமது சமுதாயமானது எல்லா மனித ஆற்றல்களையும் இழந்து போயுள்ளது.

* * *

இந்நோக்கு எமக்கு முக்கியமாக இருந்தது. ஏனெனில் எமது ஆராய்ச்சியில் கோட்பாட்டுரீதியான முடிவுக்கு வரவும், விளக்கத்தைத் தேடவும், ஒன்றுகக்கூடி அமைப்புக்களை உருவாக்குவதற்கான வழி வகைகளைத் தேடவும், நம்பிக்கையின்மையில் அமிழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்துக்கு புத்துணர்வைக் கொடுக்கவும் இது அவசியமாய் இருந்தது. புறநிலை யதார்த்த நோக்கின் அடிப்படையில் சிந்திப்பது எமக்கு ஒரு அறிவியியல் பயிற்சி மட்டுமல்ல, புறநிலைநோக்கு, உண்மை மீதான வேட்கை, நடுவுநிலையான இறனுய்வு, நேர்மை யான நிலைப்பாடுகளாவன எமது சமுதாயத்துக்கு அவசியமானவை யாகும். இத்தன்மைகள் எங்கள் பலரின் உயிருக்கு ஆபத்தானதாக வும் இருக்கும். ஆனுல் நாங்கள் இவ்வாறுன நடுவு நிலைமை கொண்ட ஆராச்சியை மேற்கொண்டதற்கே காரணம் இந்தச் சூழ்நிலையில் எங்களை மனிதர்களாகப் பேணிக் காத்தலுக்கு இது உதவும் ஒரு உத்தி யாகும் என்பதனுலேயே.

* * *

. இப் புத்திஜீவிகள் குழுவின் தன்மையை முழுச் சந்தர்ப்பவாதத் தன்மை என்பதைவிட, வேறுவகையில் விளக்கமுடியாது. இவர்களுடைய நடவடிக்கைகளும் பங்களிப்பும் பொதுவாழ்க்கையும், 'எதனைச் சுலபமாகச் செய்ய முடிந்ததோ அதனைச் செய்வதே' என்ற நிலையின் பிரதிபலிப்பாகவேயிருந்தன. 'எதனை உண்மையில் செய்யவேண்டும்' என்பது கருத்தில் எடுத்துக்கொள்ளப் படவேயில்லை

* * *

www.tamilarangam.net


# அக்டோபர் புரட்சி ! ———— நினைவு கூர்வோம் !

உலகத் தொழிலாளர்களுக்கும் காலனித்துவ நாடுகளுக்கும் விடுதலையினதும் சுதந்திரத்தினதும் நம்பிக்கையைக் கொடுத்த மாபெரும் அக்டோபர் புரட்சி நடைபெற்று எழுபத்திரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்றும் இந்தப் புரட்சி பற்றிய ஒரு சரியான பார்வையை பலர் பெற்றுக் கொள்ளவில்லை. பெரும்பான்மையான நேர்மையான புரட்சியாளர்கள் இதனைப்பற்றிய பிழையான மதிப்பீடும், முதலாளித்துவ வாதிகள் இதற்கு எதிரான அப்பட்டமான கருத்துக்களையும் கொண்டுள்ளனர். இன்றைய அக்டோபர் புரட்சியை பற்றிய சரியான பார்வையை முன்வைப்பதற்கு அதிகளவு தகவல்கள் தேவைப்படுகிறது. ஆகவே இக்கட்டுரையானது மேலோட்டமாகவே அக்டோபர் புரட்சியைப் பற்றி பார்க்கிறது.

இயற்கை விஞ்ஞானத்தில் 'பாய்ச்சல்' என்று பாவிக்கப்படும் சொல் சமூக விஞ்ஞானத்தில் புரட்சி என்று பாவிக்கப்படுகின்றது. பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு சமுதாயமும் தனக்கே உரிய ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பாய்ச்சலை நிகழ்த்தும். இதுவே சமூகப் புரட்சி எனப்படுகின்றது. இந்தப் பாய்ச்சல்கள் (புரட்சிகள்) மட்டும் எமது விருப்பமாக உள்ள குறிக்கோளை அடைந்துவிட மாட்டாது. பாய்ச்சல்கள் முடிந்த பின்பு விருப்பமான குறிக்கோளை நோக்கி பரிணாம வளர்ச்சியை வேண்டிய தேவையை எந்தவொரு புரட்சியும் மறுக்கவில்லை. ஒவ்வொரு சமுதாயத்தினதும் புரட்சிக்கு பிந்திய பரிணாம வளர்ச்சி என்பது மிக மிகக் கடினமானதும் சிக்கல் நிறைந்ததும் ஆகும். இன்றைய ரஷ்ய சமுதாயத்தின் பின்னடைவை ஆட்சி கவிழ்ப்பாக பார்ப்பது புரட்சிக்கு பின்பு நிகழும் பரிணாம மாற்றத்தைப் பற்றிய குறை மதிப்பீடே எனவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ள முடியும்.

ரஷ்யாவின் அன்றைய நிலைமைகளுக்கான காரணம் புரட்சிக்கு பிந்திய பின்னடைவு கால கட்டத்தில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகளை கையாள்வதில் இருந்த குறைபாடேயாகும். புரட்சிக் காலகட்டத்தில் காணப்படும் முரண்பாடுகளும் {பின்னடைவு காலகட்டத்தில் காணப்படும் முரண்பாடுகளும்} வேறுவேறானவையாகவே இருக்கும். புரட்சியும் புரட்சிக்கு பிந்திய பின்னடைவும் ஓர் உயர்ந்த இலட்சியத்தை நோக்கியதாக இருந்தாலும் அந்தந்தக் காலகட்டங்களில் முரண்பாடுகளை கையாள்வதில் ஏற்படும் தவறுகளானது பிழையான இலக்குகளில் எம்மை கொண்டு போய் நிறுத்திவிடும்.

சில புரட்சியாளர்கள் அக்டோபர் புரட்சியை ஓர் எடுகோளாக கொள்ளாமல் அதை ஒரு சூத்திரம் ஆக்கிவிட்டார்கள்.

உலகத்தில் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் எந்த ஒரு புரட்சியும் அக்டோபர் புரட்சியைப் போல் இருக்க முடியாது. புரட்சிகள் என்பது அந்தந்த குறிப்பான சமூக சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும். இதன் அர்த்தம் அக்டோபர் புரட்சியில் இருந்து எந்த ஒரு படிப்பினையையும் பெற முடியாது என்பதல்ல. அக்டோபர் புரட்சியையும் அதற்கு பிந்திய பின்னடைவு காலகட்டத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தி, அதன் சாதகமான பாதகமான அம்சங்களில் இருந்து பலவற்றை நாம் கற்றுக் கொள்ளலாம்.

அக்டோபர் புரட்சியானது பல படிப்பினைகளை நமக்குக் கொடுத்த போதும் இன்றைய கால கட்டப் புரட்சிகள் அதிகமான படிப்பினைகளை நமக்கு வழங்குகின்றன என்பதை இன்றைய புரட்சியாளர்கள்

www.tamilarangam.net


மனதில் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாது உலகத்தில் நடந்த நடக்கின்ற ஒவ்வொரு புரட்சியையும் நாம் ஆய்வுக்குட்படுத்தி பல படிப்பினைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இருப்பினும் அக்டோபர் புரட்சியை நாம் நினைவு கூர்வது ஏற்காக? என்ற கேள்வி எழுகின்றது. இது ஓர் ஆன்மீக நியமமல்லவே. அதாவது உலகத்தில் நடந்த ஒரு மாபெரும் அக்டோபர் புரட்சியை நினைவு கூர்வதன் மூலம் உலக மக்கள் புரட்சிக்கான தமது ஆன்மீக பலத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே அக்டோபர் புரட்சி என்பது நினைவு கூறப் படுகின்றது.

அக்டோபர் புரட்சியானது உயர்ந்த மனித வாழ்க்கையை படைக்கக்கூடிய வாய்ப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. என்ற செய்தியை ரஷ்ய மக்களுக்கும் உலக மக்களுக்கும் 1917 அக்டோபரில் சொன்னது. இன்று அக்டோபர் ரஷ்யப் புரட்சியானது உலக மக்களுக்கு சொல்லும் செய்தியானது "புரட்சிகளானது உயர்ந்த மனித வாழ்க்கையைப் படைக்கக் கூடிய ஆற்றலை ரகசியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது" என்பதாகும்.

- ஞானபாலன் -

வருந்துகிறோம்;

மனிதம்-1 ல்

- அட்டைப் படத்தில் இந்திய ராணுவத்தை, குறிப்பிட்ட ஒரு தேசிய இனத்தைக் கொண்டு காட்ட முயற்சித்தது எமது கவனக் குறைவாகும்.
- வளர்த்த கடா மார்பில்--- ஆக்கத்தில் அருளம்பலம் கொலை செய்யப்பட்டதாக குறிப்பிட்டது தவறானது.

www.tamilarangam.net



# மீண்டும் ஓர் மாநாடு.....

*********** ************** *********** ***

காலத்துக்குக் காலம் சிங்கள பேரினவாத அரசுகள் திட்டமிட்டவாறே தமிழ் மக்களை பேச்சுவார்த்தை, மாநாடு ஒப்பந்தங்கள் என தொடர்ந்து ஏமாற்றியே வந்துள்ளது. இந்த வகையில் மீண்டும் ஓர் மாநாடு கூட்டப்பட்டுள்ளது. முன்னைய மாநாடுகளைவிட வித்தியாசமான முறையில் (சிங்கள மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில்) மீண்டும் சர்வகட்சி மாநாடு என்ற அடுத்த பேச்சை தொடங்கியுள்ளது. அகிம்சை, சமாதானம் ஒற்றுமை பற்றி வாய்கிழியக் கத்தும் பிரேமதாசா இம் மாநாட்டில் படைவிலகல் பற்றி ஓர் வார்த்தைகூட பேசவில்லை.

ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் அரசியல் கட்சியாக இருந்த ஜனதா விமுக்தி பெரமுன (JVP) 1983 யூலை 30 ம் திகதி தடைவிதிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மீண்டும் தலைமறைவு இயக்கமாகவே வளர்ந்து வந்துள்ளது. JVP யின் நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் தீவிரமடைந்துள்ளது. JVP யின் கண்மூடித்தனமான (அப்பாவி மக்கள் மீதான) தாக்குதல்களும் இந்திய எதிர்ப்புக் கோசங்களும் அரசை திணறவைத்தது. இந்திய எதிர்ப்புக் கோசத்தை சிங்கள மக்கள் மத்தியில் உயர்த்திப் பிடித்ததன்மூலம் ஆளும் கும்பலை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முயற்சித்தது.

இந் நிலைமை காலடைவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கே வழி கோலும் என அச்சமடைந்த பிரேமதாசா விரும்பியோ விரும்பாமலோ இந்தியப்படை யூலை 29 க்குள் வெளியேறவேண்டும் என்ற கோசத்தை முன்வைத்தபோது இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் இழுபறிநிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து

www.tamilarangam.net


கடந்த யூலை, ஒகஸ்ட் மாதங்களில் இரு அரசுகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

இன்னொருபுறம் செப். 13ம் திகதி "சர்வ கட்சி மாநாடு" ஒன்றைக் கூட்டுவதில் பிரேமதாசா வெற்றிகண்டார். இம் மாநாட்டில் 21 அரசியல் கட்சிகள் அங்கம் வகித்தன. JVP, ENDLF, தேச விமுக்திப் பெரமுன, நவ சமசமாஜ கட்சி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி, தமிழரசுக் கட்சி ஆகியன மாநாட்டில் பங்கேற்கவில்லை.

மாநாட்டின் 3 முக்கிய அம்சங்கள் எனச் சொல்லப் படுபவை;

1. நமது மக்களையும் தாய் நாட்டையும் பாதித்துள்ள வன்முறை, அமைதியின்மை ஆகிய பிரச்சினைகட்கு இறுதிக் கட்டத் தீர்வை அடைதல்.
2. மாநாடு கூட்டுவதற்கு காரணமாகிய சம்பிரதாயமற்ற ஆலோசனைகளில் காணப்பட்ட செயல்முறைமைகளை ஆராய்வதற்கும் அங்கீகரிப்பதற்குமாகும்.
3. நாட்டில் சமாதானம் சிவில் நிர்வாகம் சட்ட ஆட்சி சீர்திருத்தம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்தும் பொருட்டும் 'ஜனநாயக' செயல்முறைக்கு வெளியே இயங்கும் குழுக்களை அரசியல் நீரோட்டத்தில் கொண்டுவருதல்

என்பனவாகும்.

மேற்கூறிய விடயங்கள் எந்தளவுக்கு செயற்படப்பெறும் என்பது கேள்விக்குரியதே! . இம் மாநாட்டில் ஆளும் UNP அரசின் மந்திரிகளான காமினி, லலித் போன்றோர் வித்தியாசமான போக்கை கடைப்பிடிக்கின்றனர். அண்மைக் காலத்தில் காமினி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையே இதற்குச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சான்றும். பாராளுமன்ற விவாதத்தினூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்றும் இது ஒர் சம்பிரதாய மேடையாகவே கருதுவதாகவும் 'கண்டுபிடிப்பை' வெளியிடுகிறார். இவ் ஆட்சிமுறை தொடர்ந்தால் காலப்போக்கில் சிங்களப் பரம்பரையை அழிந்துவிடும் என்கிறார். அரசியலமைப்பை மாற்றியமைப்பதன் மூலம் மக்களின் விருப்பத்திற்கிணங்க பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது அவரின் 'யோசனை'. "சர்வகட்சி மாநாடு தென் இலங்கைப் பிரச்சினையை மட்டுமல்ல வடக்கு கிழக்கு பிரச்சினையையும் கருத்திற்கெடுக்க வேண்டும்" என வலிந்து 'பரிவு' கொள்கிறார். அனைத்து தமிழ் குழுக்களையும் சந்தித்து சர்வகட்சி மாநாட்டில் தமிழர் பிரச்சினையை முன்வைப்பதன் மூலம் தன்னை ஜனநாயகவாதியாகக் காட்ட முற்படுகிறார்.

வாசுதேவ நாணயக்கார (நவசம சமாஜ கட்சி), தினேஸ் குணவர்த்தன (மக்கள் ஐக்கிய முன்னணி) ஓ.சி. அபயகுணசேகர (மக்கள் கட்சி) ஸ்டான்லி திலகரட்ண (சுதந்திரக் கட்சி) ஆகியோரும் வடக்கு கிழக்கு பிரச்சினைகளையும் ஆராய்ந்து தீர்வு காண சர்வகட்சி மாநாடு முயற்சி எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

மாநாட்டின் நோக்கம் முக்கியமாக JVPயை 'ஜனநாயக' வழிக்குக் கொண்டுவருவதாக இருக்கலாம். JVP தாம் அறிவியல் சார்ந்த சோஷலிச கொள்கையுடையவர்கள் என்றும் இனவாதத்தை எதிர்ப்பவர்கள் எனவும், கடந்த காலத்தைய இனக்கலவரங்களுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை எனவும் கூறுகின்றனர். அதே சமயம் இனங்கள் யாவும் சம உரிமையுடன் வாழவும், எந்த

www.tamilarangam.net


ஒரு இனமும் பிரிந்து தனித்து வாழ்வதை எதிர்ப்பதாகவும் கூறுகின்றது. தமிழருக்கு விதித்துள்ள சகல தடைகளையும் நீக்கினால் நாட்டில் சமரச இணக்கத்தையும் அமைதியையும் காண முடியும் எனவும் சர்வகட்சி மாநாடு எந்தவொரு தீர்வையும் தரப் போவதில்லை மாறாக பிரச்சினையை வளர்ப்பதற்கே வழிகோலும் எனவும் கூறியுள்ளனர்.

அடுத்து, பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீல.சு கட்சியும் மாநாட்டில் பங்குபெற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டுவந்து, இடைக்கால அர-சை ஏற்படுத்தும் படியும் இவர்கள் கோரினர். இம் முடிவுக்குத் தான் இணங்குவதாக பிரேமதாசா அறிவித்துள்ளார். ஆனால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை தேவையா? இல்லையா? என்பதை மக்களே தீர்மானிக்கட்டும் என்றும் பொதுத் தேர்தலையும் காலக்கிரமத்தில் நடத்த தயார் என்றும் விடுத்த அறிவிப்பு எதிர்பாராத ஒன்றேதான். பிரேமதாசா தான் தொடர்ந்தும் ஆட்சிபீடத்தில் இருக்க முடியும் என நம்புவதாகவே இவ் அறிவிப்பு காட்டுகிறது. சமசமாஜ, முஸ்லிம் காங்கிரஸ், EPRLF, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளும் இடைக்கால அரசை ஏற்படுத்தும்படி வலியுறுத்துகின்றன. ஸ்ரீ.ல.சு.க இன் நோக்கம் பிரச்சினையை தீர்ப்பதல்ல; மாறாக இடைக்கால அரசை நிறுவி காலக்கிரமத்தில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதேயாகும். இக் கட்சி படைவிலக்கல் சம்பந்தமாக சந்தர்ப்பவாதப் போக்கை கடைப்பிடித்தது யாவரும் அறி-

www.tamilarangam.net



நீரதே.

தேசிய அரசாங்கம் அமைப்பதன்மூலம் தேசிய நெருக்கடியை சமாளிக்க முடியும் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி J.R. ஐக்கிய சோசலிச முன்னணி இக் கருத்தை ஏற்கவில்லை. அதேசமயம் இடைக்கால அரசை ஆதரித்துள்ளன. ஆனால் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு தனது சொந்தக் கருத்தினை தெரிவித்தார். அமைதிப்படை விலகல், இல-இந். ஒப்பந்த ரத்துச் செய்தல், மாகாணசபை கலைப்பு, வடக்கு கிழக்கு அதிகார பரவலாக்கல், தகுதியடிப்படையில் வேலைவாய்ப்பு ஆகியன முன்வைக்கப்பட்ட கருத்துக்களாகும்.

இந்நிலைக்கும் தொண்டமானின் கருத்து பல கட்சிகளின் கருத்துக்களுக்கு வேறுபட்டு வைப்பதாக உள்ளது. நிரந்தரமான கருத்தை வைப்பதன்மூலம் மீண்டும் பிரேமதாசாவுக்கு தன்னை நடுநிலையாளராக காட்ட முற்படுகிறார். தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையாலேயே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என பிரேமதாசாவுக்கு முண்டு கொடுக்கிறார். பாராளுமன்ற ஆட்சி மூலம் எதையும் சாதிக்க முடியாது என்பது அவரது வாதம். அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க ஆட்சிக்கு வரலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

இம் மாநாட்டு காலப் பகுதியில் மீண்டும் இலங்கையும் இந்தியாவும் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளனர். இதன் அடிப்படையில் டிசம்பர் 31 ம் திகதிக்குள் முழு அளவில் படையை வாபஸ் பெறுவதாக இந்தியா

www.tamilarangam.net



அறிவித்துள்ளது. அதே சமயம் அதிகாரப் பரவலாக்கல், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் ஆகியவற்றை வழங்கும் பட்சத்திலேயே படைவிலகல் சாத்தியம் என்று இரட்டை வேடம் போடுகின்றது. இதேநேரம் கடைசி செய்திகளின்படி அம்பாறை மாவட்டத்திலிருந்து 200 இராணுவ வண்டிகளில் இந்தியப் படை வெளியேற்றம் நடந்ததாகவும் அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேறும் எனவும் பத்திரிகைகள் கூறுகின்றன. இந்தியா அப்படி சுலபமாக படை முழுவதையும் விலக்கிக் கொள்ளப் போவதில்லை. தனது மேலாதிக்கத்தை கைவிடுவதாக (அல்லது வேறு வழியில்) நிறுவியபின்னரே படைவிலக்கலுக்கான சாத்தியத்தை எதிர்பார்க்கலாம். இதனையே தற்போது போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தும் மக்கள் தொண்டர் படைக்கான வலைவீச்சலை தொடர்கிறது.

மாநாட்டைப் பொறுத்தவரை அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கு பிரேமதாசா எந்தளவில் செயலுருவம் கொடுப்பார் என்பதைப் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும். மாநாட்டின் நோக்கம் பிரச்சினைகளைத் தீர்ப்பதோ இல்லையோ, மக்கள் நலனில் அக்கறை கொள்ளாத கட்சிகளாலோ இயக்கங்களாலோ பிரச்சினையை தீர்க்க முடியாது. மேலும் இயக்கங்கள் 'ஜனநாயக' நீரோட்டத்தில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போரத்திலேயே குறியாக இருக்கின்றது. குறைந்த பட்சம் இயக்கங்களுக்கிடையில் ஒரு இணக்கத்தை இம்மாநாடு ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

- நந்தகுமார்

www.tamilarangam.net



# புராதன வாழ்விலிருந்து......

> பண்டைய சமுதாயம் பற்றிய அறிவினை ஓரளவு தொகுத்துத் தர இங்கு முயற்சிக்கிறேன். கட்டுரை வடிவில் கொடுப்பதை விட ராகுல சங்கிருத்தியாயனின் வால்காவிலிருந்து கங்கைவரை எனும் நாவலைத் தழுவிய உரைநடை மிகுந்த கதை வடிவில் கொடுப்பதே வாசகனை ஈர்க்க வல்லது என நினைக்கிறேன் - அந்த வழியில் இங்கு தர முயற்சித்துள்ளேன்.

நேரம் எட்டு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே கும்மிருட்டு. விளக்கேயில்லாத அந்த கற்கள் நிரம்பிய ஒழுங்கைக்குள் பழக்கமானவன்போல் மகேசின் வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் காந்தன்.

மகேசன் 84ம் ஆண்டு விடுதலை இயக்கமொன்றிற்குப் பயிற்சிக்காகச் சென்று இந்தியாவில் ஒரு வருடத்தைக் கழித்தபின் அவ் இயக்கத் தலைமையின் துரோகத்தனத்தையும் அராஜகங்களையும் இனம் கண்டு வெளியேறியவன். ஆரம்ப காலங்களில் அரசியலைப் பற்றி அதிகம் தெரியாதவனாக இருப்பினும் பின்னர் பல அரசியல் வகுப்புக்களில் பங்கெடுத்ததாலும், புத்தகங்களை வாசித்ததாலும் தெளிவுள்ள சில தோழர்களுடன் விவாதிப்பதன் மூலமும் அரசியல் என்ன என்பதையும் எதிரி யார்?, நண்பன் யார்? என்பதையும் நன்றாகவே புரிந்து கொண்டவன். இப்போது அவனும் வேறுசில நண்பர்களும் இணைந்து தலைமறைவாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


செயற்பட்டு வருகிறார்கள். இவ்வளவே மகேசனைப் பற்றி காந்தன் அறிந்துகொண்டது.

இப்போது உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு புள்ளிகள் அதிகம் இல்லாததால் வேறு வேலைகளைத் தேடிக்கொண்டிருந்த காந்தன் சாதாரண மற்றைய இளைஞர்களைப் போலவே சினிமா, குமுதம், ஆனந்த விகடன் ----- என பொழுதைப் போக்கினான். "போராட்டம் சரிவராது" "தமிழன் ஒன்றுபட மாட்டான்" .... என்று 'வேதாந்தம்' பேசித் திரிந்த காந்தனுக்கு மகேசனின் தொடர்பால் பல கேள்விகளுக்கான விடைகளைத் தேடி அறியக்கூடியதாக இருந்தது. ஆரம்ப காலங்களில் மகேசன் கூறுபவற்றிற்கு இடைமறித்து எதிர்க் கேள்விகளைப் போட்டு விதண்டாவாதங்களை மேற்கொண்டிருந்தவன். காலப் போக்கில் விவாதங்களில் உள்ள உண்மைகளை உணரத் தலைப்படும்போது தன்னுடைய பொறுப்பின்மைக்காக வெட்கப்படத் தொடங்கினான். இப்பொழுதெல்லாம் காந்தன் நன்கு மாறிவிட்டான். புரட்சியைப் பற்றிச் சிந்திக்கையில் வாழ்க்கையில் அர்த்தம் நிறைந்திருப்பதையும் புதிய உணர்வுகளை பெறக்கூடியவனாகவும் இருந்தான். அரசியலின் ஆரம்ப அடிகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கிய அவனுக்கு ஆதிகாலத்தில் பண்டைய மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதுபற்றி அறிந்துகொள்ளும் முகமாக மகேசனிடம் செல்கிறான்.

இருவரும் இலங்கைப் பிரச்சினை, உலகப் பிரச்சினை என்று பலவற்றையும் சிறிதுநேரம் அளவளாவிவிட்டு விடயத்துக்கு வருகின்றனர். காந்தனின் அரசியல் அறிவைக் கவனத்தில் கொண்டு அவனுக்கு புராதன மனித சமுதா

www.tamilarangam.net



யம் எப்படி இருந்தது என்பதைப் புரியவைக்கும் நோக்கில் நான் படித்த புத்தகமொன்றிலிருந்து சில முக்கியமான பகுதிகளை மகேசன் வாசிக்கத் தொடங்கினான்.

---------- சூரியன் சரியாக உச்சிக்கு வந்துவிட்டான். அந்தக் கூட்டத்தில் ஒரு இளையவள் போல் இருப்பவள்தான் முதலில் விழித்திருக்க வேண்டும். எதையோ கண்டு மிரண்டவளாய் கத்தத் தொடங்கினாள். இவளின் சத்தம் கேட்டு விழித்த அந்த மனிதர்கள் நடுக்குடன் மெள்ளமாக கத்தத் தொடங்கினார்கள். அந்தக் கூட்டத்தின் இருந்த பெண்ணொருத்தி மிகவும் திண்ணியவளாய் கையில் ஈட்டி போன்ற கூரிய ஆயுதமொன்றைக் கையில் தாங்கிக்கொண்டு முன்னால் வந்தாள். மற்றவர்கள் அவளைப் பின்தொடர்ந்தனர். இவர்களைக் கண்ட ஓநாய் ஒன்று புதருக்குள் ஓடி மறைந்துகொண்டது. குகைக்கு வெளியே சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்த அப்பெண் இளையவளை அணைத்துக் கொண்டாள். அந்தக் கூட்டத்தினரின் அவள்தான் தலைவியாக இருக்கவேண்டும். அவளை எல்லோரும் "அவ" என்று அழைத்தனர்.

நீண்ட நேரத்-

தின்பின் விழித்தெழுந்தமையால் அவர்களுக்குப் பசி எடுத்தது. எல்லோரும் கற்களாலானதும் ஈட்டிகள் போன்றதுமான ஆயுதங்களை கைகளில் ஏந்திக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டனர். அவ எல்லோரையும் ஒருமுறை கண்களால் நோட்டமிட்டாள். சிந்து நதிக்கரையின் அடர்ந்த காடுகளினூடே அவர்கள் வலதும் கல்லாயுதங்களையும் கூர் கொம்புகளையும் முரட்டுப் பலத்தையும் மட்டுமே நம்பிக்கையாகக் கொண்டு வேட்டையாடி வாழ்கின்றனர். அந்த நதிக்கரையோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரத்தை விட்டு வெகுதூரம் காடுகளுக்குள் அவர்களை அழை த்துச் செல்லமாட்டான். காடுகளுக்குள் திசை மாறிச்சென்று நாகத்தான் வாழ்ந்த அநுபவங்களை இளமையிலேயே சந்தித்த வன். இதைவிட ஒருமுறை அவனின் தாயார் அக் கூட்டத்தினருக்குத் தலைவியாக இருக்கும்போது வேட்டை க்காகக் காட்டினுள் அலைந்து இறுதியில் வழிதவறி வேறு ஒர் மனிதக் கூட்டம் வாழும் பகுதிக்குள் சென்றனர். இவர்களைப் பார்த்து ஆத்திரம் பொங்கிய அந்த மனித ர்கள் அவனின் தாயையும் இன்னும் பலரையும் கொன் றுவிட்டனர். அவனின் தகப்பனும் இரு சகோதரர்களும் மூன்று சகோதரிகளுமே எஞ்சியவர்கள். அன்றிலிருந்து அ- வனே அக் குழுவிற்குப் பொறுப்பாக இருந்தான். அவர்கள் இவர்களைக் கொன்றுவிட்டால் இவர்கள் அவர்களைக் கொ ன்று விடுவார்கள். எதிரிகளை சிறைப்பிடித்து அடிமைபோல் வைக்கும் பழக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை. மாறாக எதிரிகளைக் கொன்றுவிடுவார்கள். இப்போது மேலும் அ அவனின் குழு பெருத்துவிட்டது. அவளே தனது தகப்பனுக் காக மூன்று பிள்ளைகளையும் சகோதரர்களுக்காக ஏழு பிள்ளைகளையும் பெற்றெடுத்திருந்தாள். அவளின் இரு சகோதரிகளும் இவ்வாறே பிள்ளைகளைப் பெற்றெடு த்தனர். குழுவின் எண்ணிக்கை வேட்டையால் இறந் தவர்கள் போக மீதி பதினெட்டுப் பேராவது இருப்பா ர்கள்.

வெகுநேரமாய் வேட்டைக்காய் அலைந்து திரிந்த களைப்பில் நதிக்கரையில் இருந்த பெரிய மரமொன்றின் கீழ் எல்லோரும் உறங்கலாயினர். ஆனால் அவ மட்டும்

www.tamilarangam.net



இயலையால் கண்விழித்தபடி இருந்தான். இரவு வெகுநேரமாகிவிட்டிருந்தது. நாதன் அனைவரும் மிருகங்கள் எப்படியும் தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு வரும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆம், அவனது நம்பிக்கை வீண்போகவில்லை. ஒரு பெரிய மான் கூட்டமே ஆற்றுக்கு வந்துகொண்டிருந்தது. அது எல்லோரையும் உசார் படுத்தினான். அவர்களை சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து பற்றைகளின் மறைந்திருக்குமாறு கூறினான். வேட்டையில் வல்லவர்களான அவர்கள் மான்கூட்டத்தின்மீது தங்கள் ஆயுதங்களுடன் பாய்ந்தார்கள். இரு மான்களைக் கொன்றும், காயமடைந்த நான்கு மான்களை கொடியால் சுற்றிக் கட்டியும் இழுத்துக்கொண்டு தங்கள் இருப்பிடம் நோக்கி விரைந்தனர்.

அதுவரை மனிதர் வேட்டையில் கிடைத்த மிருகங்களை உடனேயே கொன்று போட்டு விடுவார்கள். உயிருடன் மிருகங்களைப் பிடித்துச் செல்லும் பழக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட பகுதி என்றில்லாமல் எல்லாவிடமும் அலைந்து திரிந்தபடியால் மிருகங்களை உயிருடன் வைத்திருப்பது சிரமமாக இருந்தது. ஆனால் பிற்காலத்தில் காடுகளில் வறட்சி நிலவிய காலத்திலும் வேட்டையில் மிருகங்கள் அரிதாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் இவர்கள் பட்டினியால் இறக்கநேர்ட்டது. இவற்றைத் தவிர்ப்பதற்கே அனின் குடும்பத்தினர் மிருகங்களை உயிருடன் வளர்க்கும் புதிய முறையினைக் கண்டுகொண்டனர். சில கிழங்கு வகைகளையும் பழங்களையும் உண்பதற்கும் பழகியிருந்தனர். ஐந்து அல்லது ஆறு தலைமுறைக்கு முன்பாக

www.tamilarangam.net



த்தான் அருவின் மூதாதையர் நெருப்பை உண்டுபண்ணுவது எப்படியென்று அறிந்துகொண்டனர். இது இவர்களுக்குப் பெரிய நன்மையாக இருந்தது. பச்சை இறைச்சியை உண்பதில் உள்ள ருசியின்மை, உடல் நோய்கள் என்பவற்றைத் தவிர்க்கவும் மற்றும் இருட்டில் வெளிச்சமாகப் பயன்படவும் கொடிய மிருகங்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவும் என பலவழிகளிலும் நெருப்பின் உபயோகம் அவர்களுக்கு உதவியாக இருந்தது.

அருவும் கூட்டத்தவரும் குகையை அடைய அநேகமாக நடுஇரவாகி விட்டிருந்தது. கொல்லப்பட்ட இரு மான்களையும் நெருப்பில் வாட்டுவதற்கான வேலைகள் தொடங்கின. அருவின் மூத்த மகன் கற்களை உரசி பல சிரமங்களுக்கு மத்தியில் நெருப்பை உண்டுபண்ணினான். மான்களை நெருப்பில் வாட்டிப் போட்டுவிட்டு எல்லோரும் பாவனை நடனம் என்றழைக்கப்படும் பண்டைய நடனமுறையில் தமக்குள் கட்டிப்பிடித்து ஆடி மகிழ்ந்தனர். நாங்கள் இப்படி பாடி நடனமாடுவதால்தான் நெருப்பில் போடப்பட்ட மான் வேகுவதாகக் கருதினர்.

இவ்வாறு வதங்கிய மான்களைக் கூரான கற்களால் கிழித்தும் அறுத்தும் தமது அன்றைய பசியைப் போக்கிக் கொண்டனர். மிகுதியை மறுநாள் உண்பதற்கு வைத்துவிட்டு அவர்கள் நித்திரைக்குத் தயாராக நேரம் அதிகாலையாகி விட்டிருந்தது. அவர்களுக்கு நேரத்தைப் பற்றிக் கவலையில்லை. எப்போது சாப்பிடுவார்களோ அதன்பிறகு தூக்கத்துக்குச் செல்வார்கள்.

www.tamilarangam.net



நாளை பொழுதும் மீண்டும் உணவு தேடும் படலம் ஆரம்பி
க்கும். இதுதான் அவர்களின் வாழ்க்கை. இப்போ ..... உணர்
வுகளின் புணர்தலை விரும்புகிறது. அது இன்று, அதை நடப்பதுக்
கும் நாளைக்கும் பிறந்த இரண்டாவது மனை அணைத்துக்கொண்
டான். இப்படியே மற்றவர்களும் தங்களுக்கானவர்களைத் தெரி
வு செய்தார்கள். அவர்களுக்குள் உடலுறவு சம்பந்தமாக எந்த
நெறிகளும் இருக்கவில்லை. தாய்- மகன், தந்தை- மகள்,
அண்ணன்- தங்கை என்ற உறவுகள் வரையறுக்கப் பட்டிருக்க
வில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஆண்கள் - பெண்கள்
என்ற வேறுபாட்டை மட்டுமே கடைப்பிடித்த ஒரு காட்டுமி
ராண்டி சமூகமாகவே வாழ்ந்து வந்தனர்........

-----------

கதை இப்படியாகப் போய்க்கொண்டிருந்தது.
மகேசன் வாசிப்பதை நிறுத்திவிட்டு அர்த்தமுள்ள புன்னகை
யொன்றை உதிர்த்தவாறு காந்தனைப் பார்த்தான். காந்
தன் தான் அறியும் இப் புதிய விடயங்களைப் பற்றி மே-
லும் விளக்கங்களைப் பெறுமுகமாக மகேசனை நோக்கி
சில கேள்விகளைக் கேட்டான்.

காந்தன் ; பண்டைய சமுதாயத்தில் கடவுள் வழிபாடு என்பது இருக்
கவில்லையா ?

மகேசன்; அப்போது வாழ்ந்த அந்த ஆதி மனிதனுடைய
சிந்தனையானது இன்றுபோல் வளர்ச்சியடைந்திருக்கவில்-
லை. இந்நிலையில் இடி, மின்னல், மழை, புயல், நெருப்பு போன்ற
இயற்கையின் சீற்றங்களால் பயத்தாலும் வேதனையாலும் துன்
பப்பட்டான்- மிரண்டான். அவனுக்கு இவைகளெல்லாம் ஏன்?,
அப்படி? ஏற்படுகிறதென்று புரியமுடியவில்லை. சொல்லப்போனால்

www.tamilarangam.net



மனிதன் அன்றைய நிலைமை, "இயற்கைக்கு முன்னால் நிர்க்கதியாக நின்றான்" என பல அறிஞர்கள் கூறுவர். இப்படி தனது கட்டுப்பாட்டில் இல்லாமல் அந்நியமாய் தனக்கு வெளியே நின்றுகொண்டு தன்னைப் பயப்படுத்தும் இந்த நீர், நெருப்பு, காற்று ----- என்பவற்றை வணக்கத்துக்கு உரிய பொருளாக மதிக்கத் தொடங்கினான். நான் வணங்குவதால் இவைகள் சீற்றமடையாது எனக் கருதினான். அதுமட்டுமல்ல இப்படி வணங்குவது ஆன்மீக ரீதியில் அவர்களுக்கு அமைதியையும் கொடுத்தது. இப்படித்தான் ஆரம்பகால கடவுள் வழிபாட்டு முறைகள் உருவானது. இந்த அடிப்படையிலேயே எமது இந்து சமயத்திலும் நெருப்புக்கு - அக்னிதேவன் வழிபாடு, நீருக்கு - வருணதேவன், காற்றுக்கு - வாயுதேவன் வழிபாட்டு முறைகள் உருவானது. இப்படி இந்து சமயத்தில் மட்டுமல்ல ஏனைய சமயங்களிலும் இம் முறைகள் காணப்படுகின்றன.

காந்தன்; கதையில் அந்த மனிதக் கூட்டத்திற்கு ஏன் அன்று பெண் தலைமை தாங்கினள்? வேட்டையாடிய மனிதர்கள் எப்படி விவசாயம் செய்யத் தொடங்கினர்கள்? ஆதி பண்டைய சமுதாயம் எப்படி இன்றுள்ள நிலைக்கு வந்தது?

மகேசன்; இன்றுள்ளதுபோல் உற்பத்தியில் ஆண்களே முக்கிய பங்கு வகிக்கும் சமூகமாக இருக்கவில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உழைப்புப் பிரிவினை ஏற்படவில்லை. அன்று எல்லாரும் வேட்டைக்குச் சென்றார்கள் - கிடைப்பவற்றை சமமாக உண்டு வாழ்ந்தார்கள். பிள்ளை பெறுவது பராமரிப்பது போன்ற சில விசேட உடற்கூற்றுத் தன்மையால் ஆண்களைவிட அதிக உழைப்பை தாங்கியபடியால் இயல்பாகவே சமூகத்தின் ஆளுமை

www.tamilarangam.net



பெண்களிடமே இருந்தது. அதனால்தான் பண்டைய சமுதாயத்-
-தை "தாய்வழி சமுதாயம்" என அழைக்கின்றனர். இந்த முறையில் அக் கூட்டத்துக்கு அவள் தலைமை தாங்கினள்.

ஆனால் காலங்கள் செல்ல அறிவின் சிந்தனையினரான பின்பு வந்த மனிதர்கள் சிறு சிறு குழுக்களாகக் கூடி வாழ்ந்தனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உழைப்புப் பகிர்வு ஏற்பட்டது. ஆண்கள் வேட்டையாடினர்; சண்டை போட்டனர்; மீன் பிடித்தனர்.... இதற்குத் தேவையான கருவிகளை தயாரித்தனர். பெண்கள் வீட்டைப் பார்த்துக் கொண்டனர்; உணவும் உடையும் தயார் செய்தார்கள்; குழந்தைகளையும் வயோதிபர்களையும் பராமரித்தனர்.... . அவர்கள் தமது தேவைக்காகவும் தாம் வளர்க்கும் பிராணிகளின் தேவைக்காகவும் பயிர் செய்யத் தொடங்கினர்.

நாடோடிகளாக வாழ்வதில் வெறுப்புற்ற மனிதர்கள் வளமுள்ள நிலங்களைத் தேடிச் சென்று குடியேறினர். இப்படிக் குடியேறியவர்கள் தங்களின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு உபரியாகவும் உற்பத்தி செய்தார்கள். கால்நடைகளை வளர்ப்பதன் மூலமும் தங்கள் செல்வத்தை பெருக்கிக்கொண்டனர். இதனால் தேவைகளும் அதிகரிக்க மேலும் மேலும் உழைப்பும் செல்வமும் தேவைப்பட்டன. உற்பத்தியும் உபரியும் அதிகரித்தது.

இதனால் நாடோடிகளாக வாழும் வேடர் சமூகங்களுக்கும் இடையர்களும் உழைப்பின் பகிர்வு ஏற்பட்டது. ஏனெனில் வேடர் சமூகம் தனது வேட்டைப் பொருட்களைக் கொடுத்து விவசாய இடையர் சமூகங்களின் மிகை உற்பத்திப் பொருட்களைப் பண்டமாற்றச்

www.tamilarangam.net



செய்துகொண்டனர். பின்பு இன்னும் உற்பத்திப் பெருக்கமும் தேவைகளும் அதிகரிக்க புதிய உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது பட்டறைகளில் பாவிக்கப்படும் துருத்தியின் உபயோகத்தை மனிதன் கண்டுபிடித்தான். இதன் உதவியால் உலோக உற்பத்தி, வண்டிகள், மட்பாண்டம் செய்யும் கருவிகள், சக்கரங்கள் என்பவற்றைச் செய்யத் தொடங்கினன். இச் சிறு கைத்தொழில் வளர்ச்சியானது விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் இடையில் வேறுபாட்டை பிளவை உண்டுபண்ணியது.

மனிதர்களுக்கிடையில் ஏற்பட்ட இந்த உழைப்புப் பகிர்வுதான் வர்க்கங்கள் இல்லாத சமுதாயமாக வாழ்ந்தவனை வளர்ச்சிப் போக்கில் அடிமை சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என வளர்ச்சியடைய வைத்தது. ..........

ஒரு பெட்டிப்பிரசங்கமே செய்து முடித்தான் மகேசன். நேரமோ இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டிருந்தது. இருந்தும் மனிதனின் பண்டைய வாழ்வை அறிந்துகொள்ள இது சம்பந்தமான புத்தகங்களின் பெயர்களை காந்தனிடம் கூறினான் மகேசன். இதற்கு மேலும் தொடர்ந்து "அடிமை சமுதாயம்" என்பதும் அடுத்த கட்டத்தை அடுத்தமுறை விவாதிக்கலாம் என கொட்டாவி விட்டபடியே கூறினான். நேரம் சாமப்பொழுதை எட்டிப் பிடித்திருந்ததால் காந்தன் மகேசனின் வீட்டு விறாந்தையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் நித்திரைக்கு ஆயத்தமானான். காந்தன் எண்ண அலைகளை உசுப்பிவிட்டான். அங்கிருந்த பாயில் மகேசனை விரைவிலேயே நித்திரை ஆட்கொண்டுவிட்டது. ஆனால் காந்தனின் மனத்திரையில் ..........

எஸ்.குமாரசாமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விஞ்ஞானம் :

# மனிதன்



நியண்டேர்தல் மனிதன்.

பூமியின் மேற்பரப்பில் பல்வேறு பட்ட உயிரினங்கள் பரிணாம வளர்ச்சியினூடாக தோற்றம் பெற்றன. ஆனால் தோன்றிய உயிரினங்கள் அனைத்தையும் இன்று நாம் காண முடிவதில்லை. காரணம் இயற்கைத் தேர்வு. டைனோசோர் போன்ற விலங்கினங்கள் இன்று அழிந்து போன உயிரினக் கூட்டமாகும். இவை முன்பொருகாலம் பூமியில் வாழ்ந்தன என்பதற்கு, ஆதாரமாக இன்று நாம் காண்பதும் பேணிப்பாதுகாப்பதும் அவற்றின் எலும்புக் கூடுகளையே. ஏன் இவை அழிந்தனவென்றால் பிந்திய காலங்களில் ஏற்பட்ட கால நிலை மாற்றம், இயற்கைத் தேர்வு போன்றவற்றை இவ்வுயிரினங்களால் வெற்றி கொள்ள முடியாமல் போனமையே! எனவே ஓர் உயிரினத்தின் தோற்றத்தையோ அல்லது அழிவையோ நாம் எம்முடைய வாழ்காலங்களில் நேரடியாக அவதானிக்க முடியாத காரியமாகும். ஏனெனில் இவை மிகவும் நீண்ட கால இடைவெளியூடாக நடந்தேறும் செய்முறைகளாகும். இந்த வகையிலேயே ஓர் வகைக் குரங்கிலிருந்து மனிதன் தோற்றம் பெற்றான். இதுவும் பல கோடி வருட இடைவெளியினூடாக நடந்து முடிந்த சம்பவமாகும். ஆனால் குரங்கிற்கும் (இருகாலிகள்) நவீன மனிதனுக்கும் இடைப்பட்ட மனிதக்குரங்குகளை இன்று நாம் காண முடிவதில்லை. அதற்கு ஆதாரமாக அவர்களின் என்பு மிச்சங்களையே

www.tamilarangam.net



நில அகழ்வுகளின் மூலம் கண்டறிய முடிகிறது.

பல்வேறுபட்ட விலங்கினங்கள் பல்வேறுபட்ட வாழிடங்களில் வாழ்ந்து கொண்டன. ஆனால் ஆரம்ப காலத்திலிருந்தே குரங்குகள் மரங்களை தமது வாழிடமாக அமைத்துக் கொண்டன. வாழிடங்களுக்கும், செயற்பாட்டிற்கும் ஏற்ற முறையில் உடலமைப்புப் பெற்றுக் கொள்வது இயல்பான செயல்முறையாகும். உதாரணமாக வௌவால், திமிங்கிலம் போன்றவற்றை எடுத்துக் கொண்டால் இரண்டும் பல நெருங்கிய இயல்புகளைக் கொண்ட விலங்குகள் (பாகுபாட்டில் ஒரேகணம்) ஆனால் திமிங்கிலம் நீரில் வாழ்வதனால் முன்னவயவம் நீந்தும் தொழில் செய்வதற்காக துடுப்புப் போன்றும், வௌவால் பறந்து திரிவதால் முன்னவயவத்தின் விரல்களிடையே சவ்வு தோன்றி செட்டை போன்றும் அமைப்புப் பெற்றன. இதே போன்றே குரங்குகள் மரத்தின் வாழ்ந்தமையால் பற்றிப் பிடிப்பதற்காக முன்னவயவம் பின்னவயவம் போன்றன ஏற்றவாறு இசைவாக்கமடைந்திருந்தன. முன்னவயவம் கை போன்று ஐந்து நீண்ட விரல்களைக் கொண்டிருந்தது. விரல்கள் கொளுக்கி போன்ற அமைப்பை பெற்றுக் கொள்வதற்காக மிகவும் நீண்டிருந்தன. முன்னவயவம் போன்றே பின்னவயவமும் காணப்பட்டது ஆனால் சிற்சில சிறு அமைப்பின் மூலம் பின்னவயவம் வேறுபடுகிறது. இதே போன்றே குரங்கு மரத்தில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ள பொருட்களை நுகர்ந்து உணரும் சக்தி மற்றைய தரைவாழ் விலங்குகளைப் போல அதிகம் தேவைப்படவில்லை. எனவே மூக்கானது மற்றைய விலங்குகளைப் போல நீண்டு காணப்படாமல் சிறியதாய் தட்டையாக அமைந்து கொண்டது. மாறாக [நீண்ட தூரப் பொருட்களைப் பார்க்க] பார்வை உணர்வு மிகவும் அதிகம் தேவைப்பட்டது. எனவே நேரான அவதானத்திற்கு ஏற்ற வண்ணம் கண் அமைந்து கொண்டது. அத்துடன் சுறுசுறுப்பு, தந்திரம் போன்றவையும் இவற்றில் தோன்றிய விசேட அம்சமாகும். இவையாவும் மற்றைய விலங்குகளை விட குரங்கில்

www.tamilarangam.net



காணப்பட்ட விசேட அம்சங்களாகும்.

அடர்ந்த காடுகளில் ஏற்பட்ட இயற்கை அழிவுகள் காரணமாக அங்கு வாழ்ந்த குரங்குகள் தரை நோக்கி இடம்பெயர வேண்டிய தேவை ஏற்பட்டது. இவற்றின் இடம் பெயர்வானது கரையோரங்களை நோக்கிய சிறிய புல் வெளிகளையும் பற்றைக் காடுகளைக் கொண்ட பிரதேசங்களைக் காணப்பட்டது. முன்பு மரங்களில் வாழ்ந்த போது அச்சூழலுக்கு ஏற்றவாறு காணப்பட்ட உடலமைப்பானது இப்போது தரை வாழ்விற்கு உகந்தவாறு ஈடுகொடுக்கவில்லை. மரங்களில் வாழும் போது உயர்வான பார்வை வீச்சை கொண்டிருந்தமை எதிரிகளை இலகுவில் கண்டறியவும், அத்துடன் இலகுவாகப் புரிந்து கொண்டு தனது செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. தரை நோக்கி இடம் பெயர்ந்து நான்கு அவயவங்களாலும் நகர்ந்து திரியும் போது தலையானது தரையை நோக்கி கீழ் நோக்கி கவிழ்ந்து கொண்டது. எனவே பார்வையானது கீழ் நோக்கி புவியின் சிறு பகுதியை உள்ளடக்கிக் கொண்டது. அதாவது பார்வை வீச்சானது மிகவும் குறைந்து கொண்டது. எனவே தூர உள்ள பொருட்களையோ அல்லது சம்பவங்களையோ உடனடியாக பார்த்து அறிந்து கொள்ளும் நிகழ்தகவு குறைவாக இருந்ததுடன் மற்றைய தரை வாழ் விலங்குகளைப் போல இவற்றால் உடனடிச் செயற்பாடுகளை தேவைக் கேற்ப அக்கணத்திலேயே நிறை வேற்ற முடியாத தன்மையும் ஏற்பட்டது. இந்நிலை தொடருமாயின் இத்தரை வாழ் குரங்கினம் அழிய வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே பற்றைகளிலும், சிறு பற்றைகளிலும் மறைந்துள்ள தமது எதிரிகளைக் கண்டறிவதற்காகவும் வேறு தூர நடக்கும் சம்பவங்களை அறியவும் முன்னவையவங்களை தரையில் இருந்து உயர்த்தி பின்னவையவங்களில் நின்று கொள்ள முயற்சித்தன. எனவே தலையானது தரை மட்டத்தில் இருந்து உயர வைக்கப்பட்டதுடன் பார்வை வீச்சானது மிகவும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டது. எந்த விலங்கினமும் தம்மைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாதுகாத்துக் கொள்ளத் தேவையான செயற்பாட்டை அடிக்கடி செய்து கொள்வது இயல்பு. இவ்வாறு நிமிர்ந்து நிற்கும் புதிய முயற்சியினால் அச்சூழலில் வெற்றி கொண்ட விலங்குகள் இயற்கையால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இயற்கைத் தேர்வுக்கு உள்ளாக்கப்பட்டன. எனவே இது குரங்கில் நிமிர்ந்த நிலை ஏற்படக் காரணமாயிற்று. அதாவது மரங்களில் இருந்து விடுபட்டு நிலத்தில் வாழத் தொடங்கியமையே மனிதத் தோற்றத்தின் முதல் படியாகும். உடம்பின் பாரத்தை கால்கள் தாங்கி நிற்கும் தன்மை பெற்றவுடன் முன்னவயவம் இடம்பெயரும் தொழிலில் இருந்து விடு-பட்டது. காலப் போக்கில் முன்னவயவம் பிறவாய நுணுக்கமான வேலை செய்ய தொடங்கியுடன் முற்கை இடம்பெயரும் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றது.

வாழிட மாற்றமானது நிமிர்ந்த நிலை ஆட்சி செலுத்தக் கட்டாயப்படுத்தியது போல், நிமிர்ந்த நிலையானது உடலின் அமைப்பில் பெரும் உடலியல் மாற்றங்களை ஏற்படத் தூண்டியது. குரங்குகளில் பல இனங்கள் காணப்பட்டன. மேற்கூறப்பட்டது போல் தரை வாழ்வை மேற்கொண்டதன் விளைவாக ஏற்பட்ட விலங்குகளான 500 தொடக்கம் 600 கன சென்ரி மீற்றர் கனவளவு மூளையை கொண்ட குரங்கினமே மனிதக் குரங்கை தோற்றுவித்தன. இவற்றின் வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு நிலையில் மூளையின் கனவளவு 752 கன சென்ரி மீற்றர் ஆகக் காணப்பட்டது. இதனூடாக தோன்றிய முதல் ஆதி மனிதனை பித்தக் காந்திரோப்பஸ் என அழைக்கப்பட்டது. இதன் மூளையின் கன அளவு 900 $cm^3$ ஆகக் காணப்பட்டது. இது குரங்கிற்கும் மனிதத் தோற்றத்திற்குமான இணைப்பெனக் கருதலாம் இவ்வாறு டார்வின் கருதினர்.

இவ்வாறு தோன்றிய ஆதி மனிதக் கூட்டத்திற்கு நிமிர்ந்த தோற்றம் மட்டுமே குரங்கிலிருந்து வேறுபட்ட அம்சமாக

www.tamilarangam.net



காணப்பட்டது. கூடுதலாக மனிதக் [சிம்பன்சி] ஒத்திருந்தது ஆனாலும் இந்தக் கட்டத்தில் இருந்தே 'மனிதன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுவிட்டது. பல கோடி வருட இடைவெளியின் ஊடாக ஏற்பட்ட மாறுதல்களின் விளைவாக தோன்றிய 'மெகாந்திரோப்பஸ்' மனிதக் கூட்டமானது மற்றைய விலங்குகளைப் போல மிகவும் பலம் மிக்கதாகக் காணப்பட்டது. உண்மையான எலும்புக் கூடுகளையும், வலிமை மிக்க தலை-களையும் கொண்டிருந்ததை இவற்றின் ஆதாரமாகின்றன. எதிரிகளில் இருந்து தம்மைப் பாதுகாக்க ஒரே ஒரு ஆயுதமாக தம்முடைய பலத்தையே தமது வாழ்க்கையில் பயன்படுத்தின. பிந்திய கால வளர்ச்சியின் போது கல்லாயுதங்களைப் பயன்படுத்தியுள்ளன.

நிமிர்ந்த நிலையை பெற்றதன் பின்னர் முள்ளந்தண்டானது புவிக்கு செங்குத்தான நிலையை பெற்றுக் கொண்டது. மற்றைய நாலுகால் விலங்குகளின் முள்ளந்தண்டானது புவிக்கு சமாந்தரமாக அமைந்திருந்ததால் உடல் பாரத்தை அதிர்ச்சியில் இருந்து பாதுகாப்பதற்கு விசேட செயல்முறை எதுவும் தேவைப்படவில்லை. ஆனால் குரங்கு நிமிர்ந்த நிலையை பெற்றுக் கொண்டமையால் உடலை அதிர்ச்சியில் இருந்து விலக்க முள்ளந்தண்டில் சில முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதாவது முள்ளந்தண்டில் வளைவுகள் ஏற்பட்டன. தற்கால மனிதனில் நான்கு வளைவுகள் காணப்படுகிறது. கழுத்து வளைவு, நெஞ்சறை வளைவு, இடுப்பு வளைவு, நாரி வளைவு என்பன. ஆனால் ஆரம்பகால நிமிர்ந்த நிலையின் போது இரு வளைவுகளே காணப்பட்டன.

மரங்களில் வாழும் போது பற்றும் உறுப்பாக மட்டுமே கை தொழிற்பட்டது. எனவே பெருவிரலின் விருத்தியும் நெகிழ்வுத்தன்மையும் அங்கு தேவைப்படவில்லை. அத்துடன் பற்றிப்பிடிக்கும் தொழிலை செய்வதற்குத் தடையாகவும் இருந்தது. தரையில்

www.tamilarangam.net



வாழும் போது பொருட்களைப் பற்றி எடுப்பதற்கும் தமது அன்றாட வேலை-களை நிறை வேற்றிக் கொள்வதற்கும் பெருவிரலின் விருத்தி முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. எனவே பெருவிரலின் இயக்கும் தசைகளின் விருத்தி காணப்பட்டது. அத்துடன் அதிவிசேட செயற்பாடாக பெருவிரல் மற்றைய நான்கு விரல்களுடனும் எதிரடையும் தன்மையும் பெற்றுக் கொண்டது. இத்தன்மையைப் பெற்றுக் கொண்டமையே கையானது மேலும் நுணுக்கமான வேலைகளைச் செய்யத் தொடங்கியது. அதாவது குரங்கு தற்கால மனிதனை வளர்ச்சியை நோக்கிய முக்கிய காரணி உழைப்பு என்றும் கூறலாம். இத் தொண்டானது கையின் ஊடாக மூளையின் வளர்ச்சியையும் தூண்-டியது. இது மட்டுமல்லாது இவ்விரு உறுப்புகளிலும் வளர்ச்சி ஏற்படுத்தியது. கையையும் கையில் உள்ள விரல்களின் நுணுக்கமான தொழிற்-பாட்டையும் கட்டுப்படுத்த மூளையின் விருத்தியும், மூளையின் விருத்திக்-கேற்ப கையின் அமைப்பில் மாற்றமும் ஏற்பட்டன. அதாவது மூளைக்கும் கைக்கும் ஏற்பட்ட இடையிலான போட்டியினால் இவ்-விரு உறுப்பும் உயர் வளர்ச்சி ஏற்படக் காணப்பட்டன.

பாய்ந்து தாவி மரங்களைப் பிடிக்கும் போது சமநிலையைப் பேணுவதற்காக நீண்ட வால் காணப்பட்டது. நில வாழ்க்கையை மேற்கொண்டு இரு கால்களில் நடக்கும் போது வால் இடப்பெயர்ச்சிக்கு தடையான உறுப்பாகியது. எனவே இது காலப் போக்கில் அற்றுப் போயிற்று. இன்றும் நமது உடலில் பல பயனற்ற உறுப்புகள் காணப்படவே செய்கின்றன. முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதியில் வால் என்புகள் குறுகி நான்கு சிறு என்புகளாக இணைந்து காணப்படுகிறது.

மரங்களில் பற்றிப்பிடிப்பதே முக்கிய தொழிலாகக் காணப்பட்டமையால் முன் பின் அவயவங்களின் உள்ள விரல்கள் மிகவும் நீளமாக அமைந்திருந்தன. தரையில் நடந்து

www.tamilarangam.net



பிடிப்பதற்கு நீண்ட விரல்களாக இருந்தமை மிகவும் சிரமமாகவும், தடையாகவும் இருந்தது. எனவே காலப்போக்கில் விரல்கள் பருமனில் சிறிதாக மாற்றம் கண்டன. அத்துடன் பின்னைய காலத்தில் காணப்-பட்ட பெருவிரலானது (1வது விரல்) ஏனைய விரல்களை விட மிகவும் பெரு விருத்தியை பெற்றது. ஏனெனில் இதனூடாகவே உடல் பாரத்தின் பெரும் பகுதி கீழ் நோக்கி தரைக்குச் செலுத்தப்பட்டது. அத்துடன் மேலும் உடல் அதிர்ச்சியிலிருந்து பாதுகாக்க பாதத்திலும் மாற்றம் கொண்டு வரப்பட்டது. அதாவது பாதமானது உள் நோக்கி வளைந்து கொண்டது. (பாதவளைவு ஏற்பட்டது)

கால்கள் உடல் அச்சிற்குப் பக்கப்புறமாக வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைந்திருந்தமை மரங்களில் வாழ்ந்த அந்தக் காலகட்டத்திற்கு ஏற்றதும் தேவையான அம்சமாகக் காணப்பட்டது. நிமிர்ந்த நிலையை அடையும் போது இது முற்றான தகவமைப்பை கொடுக்கவில்லை. இப்போது 'நடை' என்னும் புதிய தொழில் செய்வது மட்டுமல்லாமல் உடல் பாரம் முழுவதையும் தாங்க வேண்டியும் இருந்தது. ஆரம்ப கால அதிமனிதக் கட்டத்திற்கு நடை வளமும் குறைந்து காணப்பட்டமை இதற்கு ஆதாரமாகும். எனவே பிந்திய காலகட்டங்களில் தொடையென்பிலும், இவ்வென்பிற்கு இடையே உள்ள கணுக்காலிலும் செம்மையான மாற்றங்கள் ஏற்பட்டன. தொடையென்பானது உடல் அச்சிற்கு செங்குத்தாக தகவமைந்து இடுப்பு வளையத்துடன் பொருந்திக் கொண்டது. எனவே நிமிர்ந்த நிலை செம்மைப்படுத்தப்பட்டதுடன் நடக்கும் செய்முறையும் திறம்பட அமைந்து கொண்டது. இவை தவிர்த்து என்புகளில் ஏற்பட்ட மாற்றம் -இன்றி அத்துடன் தொடர்புடைய தசைத் தொகுதியிலும் ஏற்பட்ட இசைவான மாற்றமாகும்.

முன்பு தாவர போஷணியாக வாழ்ந்தவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போது இரை மாமிசத்தையும் உணவாக கொண்டன. மாமிச உண்ணியாக (அனைத்தும் உண்ணி) மாறிய போது ஓய்வு நேரம் அதிகம் கிடைத்துக் கொண்டது. அதாவது புரத உணவு -கள் அதிக சக்தியை கொடுக்க வல்லன. எனவே உணவு தேட -வதற்குரிய நேரம் குறைந்து கொண்டமையே ஓய்வு நேரம் அதிகம் கிடைத்தமைக்குரிய காரணமாக இருந்தது. ஓய்வு நேரத்தின் போது சிந்திக்கத் தொடங்கின. அதாவது மூளை என்ற உறுப்பின் சிந்தனை என்னும் தொழிற்பாடானது அங்கிருந்து மேலும். மேலும் முன் நோக்கி நகர வைத்தது. ஆகவும் தேவையும் சிந்தனையைத் தூண்ட சிந்தனையானது செயலாக்கம் பெறும் போது கருவிகள் தோன்ற -வித்தன. ஏற்கனவே கையானது நுணுக்கமான வேலைகளைச் செய்யக் கூடிய உறுப்பாக மாற்றமடைந்திருந்தமையும் இதற்கு சாதகமாக இருந்தது. ஆரம்ப காலங்களில் தமது பாது காப்பிற்கு தேவையென கருதியவற்றை உருவாக்கிக் கொண்டன. கற்களை கூரான அமைப்புகளாக மாற்றின. இம் இந்த மூளை வளர்ச்சியின் தற் -போதைக்கட்டம் தான் ~~நவீன மனிதனின் உயர் செயற்பாடுகளாகும்~~ குரங்கிற்கும் மனிதனுக்குமிடையிலான பரிணாமிப்பிற்கு இடைப்பட்ட மனிதக் குரங்குகள் பின் வருமாறு சுருக்கமாக அடக்கலாம்.



1 ★ சிம்பன்ஸி



2 ★ பித்திக்காந்திரோப மண்டையோடு.



3 ★ சினந்திரோப்பஸ்

4 * தெனந்திரப்போஸ்

5* அட்லாந்திரோப்பஸ்

6 * நியண்டதல்

7 * ஹோமோசபியன்

8 * ஹோமோசபியன் சபியன்

▶ கிமலினி ◀

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுவிஸ்;


Fremdenhasser stürmten in Asylantenheim – Polizei sah zu

● So berichtete BLICK gestern über das Treiben der Frönler.

# தொடரும் இனவெறி

மீண்டும் இனவெறியர்கள் அகதிகள் முகாம்மீது தாக்குதல்! பொலிசாரும் உடந்தை !! இவ்வாறு நவம்பர் 6ம் திகதி சுவிற்சர்லாந்து தினசரிகள் கொட்டை எழுத்தில் தலையங்கம் தீட்டின. ஆம்! நவம்பர் 4ம் திகதி சனிக்கிழமை 'தாய்நாட்டு முன்னணி' (Patriotischen Front) தனது பொதுக்கூட்டத்தினை கன்ரோன் சுக் (Kanton Zug) இல் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் கூடியது. இக் கூட்டத்தில் அறுபது உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கூட்டம் முடிந்தபின் ஸ்ரைன் கௌசன் (Steinhausen) இல் அமைந்துள்ள அகதி முகாமை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். "சுவிற்சர்லாந்தவரே முதன்மையானவர்கள்", "சுவிஸ் சுவிஸ்நாட்டவர்க்கே", "ஊத்தைத் தமிழன்", "ஊத்தைக் கூட்டங்களே வெளியேறு" போன்ற சுலோகங்களை கோசித்த வண்ணம் அகதி முகாமை முற்றுகையிட்டனர். முகாமின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர். அகதிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைத் தாக்கினர். சமையலறை பாத்திரங்கள் உடைத்து வீசப்பட்டன. இவ்வளவு அட்டகாசங்களும் நடந்து கொண்டிருக்கும்போது கன்ரோன் சுக் பொலிசார் பார்வையாளர்போல் வேடிக்கை பார்த்தனர். இவ்வாறொரு தாக்குதல் நடக்கப்போகிறது என பொலிசார் முன்கூட்டியே முகாம் பொறுப்பாளர்களுக்கு எச்சரிக்கையும் செய்துள்ளனர்.




அகதி முகாம் மீதான தாக்குதலின் பின் சிலுவையை எரித்து சபதம் எடுக்கும் நாசிகளுடன் இளைஞர்கள் இணைகின்றனர்.

இச் சம்பவத்தில் பொலிசாரின் ஒத்துழைப்பைக் கண்டித்து ஒரு சில கட்சிகள் நவம்பர் 6ம் திகதியன்று ஒரு ஊர்வலத்தை நடத்தினர். சுமார் 500 பேர்வரை இவ் ஊர்வலத்தில் பங்குகொண்டனர். தலைமைப் பொலிஸ் அதிகாரியை பதவியிலிருந்து விலகுமாறும் கன்ரோன் சுக் (Zug) அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரினர். இந் நடவடிக்கைகளில் அம்பலப்பட்ட பொலிசார் பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டி இச் சம்பவம் சார்பான தமது நிலைப்பாடுபற்றி கீழ்கண்டவாறு தெரிவித்தனர்.

ஊர்வலம் நடக்க இருப்பதாக நாம் அறிந்ததாயும் அதுவேளை நாம் ஊர்வலத்தின்போது சிக்கல் நடந்ததாயும் முகாம் யன்னலை உடைக்கும்போது நாம் தலையிட எண்ணியதாயும் ஆனால் அவர்கள் விரைவாகவே அவ் இடத்தைவிட்டு அகன்று விட்டதால் நாம் நடவடிக்கை எடுக்கமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

www.tamilarangam.net



நாஸிநாஸிடு முன்னணி இவ்வளவு அட்டகாச த்தையும் செய்துவிட்டு ஒரு சிலுவை ஒன்றை எரித்துச் சப தம் ஏற்றனர். அமெரிக்காவிலுள்ள இனவெறியர்களின் அமை ப்பாகிய கு குளக்ஸ் கிளான் (Ku kux klan) இன் பாணியில் இச் சிலுவை எரிப்பு நிகழ்ச்சி நடந்தது. அமெரிக்காவில் இந்த கும்பல் தமது இனவெறியை வெளிப்படுத்த கறுப்பு நிறத்த வர்களின் கத்தோலிக்க ஆலயங்களில் உள்ள சிலுவைகளை எரித்து வருகின்றனர்.

அரசியல் கட்சிகளிடையே பொலிசாருக்கு எதிரான பரவலாக எதிர்ப்பு எழுந்ததைத் தொடர்ந்து பொலிசார் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 5 பேரை 7ம் திகதியன்று கைதுசெய்தனர். 9ம் திகதியன்று இவர்க ளிமீது வழக்குத் தொடரப்பட்டு பின்பு விடுதலை செய் யப்பட்டனர். இவர்களில் கன்ரோன் சுக் (Zug) ஐச் சேர் ந்த மூவர் 16 தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்டவர்கள். மற்ற இருவரும் கன்ரோன் சொலத்தூண் (Kanton Solothurn) கன்ரோன் சாப்ஃகௌசன் (Kanton Shaffhausen) ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.




(பொலிசாரின் நடவடிக்கையை எதிர்த்து இடம்பெற்ற ஊர்வலம்.)

திங்கள் அன்று (6ம் திகதி) இரவு Schaffhausen இல் இருந்து 50 கி.மீ தொலைவிலுள்ள Buch என்ற இடத்திலுள்ள அகதி முகாமொன்றின் முன்னால் வெடிமருந்து கொண்டு இரும்புச் சிலுவையொன்றை எரியூட்டி னர். இச் சம்பவத்திற்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Schaffhausen இலுள்ள சுவிற்சர்லாந்து புரட்சிகரக் கட்சி (NPS) க்கு இச் சம்பவத்துடன் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதுவும் ஓர் இனவெறி அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

அகதிகள் மீதான தாக்குதல் பற்றி சுவிற்சர்லாந்து சமஷ்டி பாராளுமன்ற பேச்சாளர் பத்திரிகையாளர்களிடம் பின்வருமாறு கூறியுள்ளார்.

மனித உரிமைகளை மதிக்கும் நடுநிலை நாட்டில் இவ்வாறு நடந்தமை தன்னை வருத்துவதாகவும் இதே காலத்தில் அகதி முகாம்களை நோக்கி இனவெறியான சில முறையற்ற சட்டத்தை திருத்துவது பற்றி ஆராய்வதாகவும் இன, மத, நிற ரீதியில் யாரையும் வசை செய்தால் தண்டம் விதிப்பது பற்றியும் ஆராய்வதாகவும், மேலும் கிளரோன் Zug பொலிசாரின் நடவடிக்கை பற்றிய முழு விபரத்தினை அறிவதோடு விசாரணைக்குழு ஒன்றை அமைக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

சுவிஸிலுள்ள கிளரோன் பொலிசாரை சமஷ்டி பாராளுமன்றம் விமர்சித்திருப்பது இதுதான் முதல் தடவை என பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆயினும் புதிய சட்டத் திருத்தங்கள் மூலம் இனவெறியர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கலாம் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் இச் சட்டத் திருத்தங்கள் நடைமுறையிலுள்ள ஜேர்மன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இனவெறி அதிகரித்து வருவதும் இச் சட்டங்கள் அர்த்தமற்று போவதையும் காணக்கூடியதாக உள்ளது. — மா.நரேந்திரன்

www.tamilarangam.net



# கிழக்கு அய்ரோப்பாவில் சோஸலிசம்?

சமீபகாலமாய் சோசலிஸ நாடுகளில் நடக்கும் மாற்றங்களை முதலாளித்துவ பத்திரிகைகள் பாராட்டி புகழ்கின்றன.

குறிப்பாக கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மன் நோக்கி படை யெடுப்பது, ஹங்கேரி கிழக்கு ஜேர்மன் அகதிகளுக்காக தனது எல்லைப் பாதுகாப்பை தளர்த்தி மேற்குலக நாடுகளுக்கு ஆதரவு அளிப்பது. அல்லது சார்பு நிலை எடுப்பது, போலந்தில் கம்யூனிஸக் கட்சி ஆட்சிமுறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்தியமை போன்றவைகள் இன்று சோசலிச நாடுகளில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களாகும்.

இவ் சோசலிஸ நாடுகளின் மாற்றங்களை முதலாளித்துவ நாடுகள் கம்யூனிஸத்துக்கு ஏற்பட்ட தோல்வியெனவும் கம்யூனிஸ சமுதாயத்தை நடைமுறையில் உருவாக்க முடியாது எனவும் தமது வழமையான பிரச்சாரத்தை மீண்டும் பலமாக முடுக்கி விட்டுள்ளன.

(சோசலிஸ நாடுகளில் இருந்த உணவுப் பஞ்சம், அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, ஜனநாயகமின்மை போன்றவையே இவர்களது பிரச்சாரத்தின் அடிப்படை. இவர்கள் கூறுபவைகளில் பெருமளவு உண்மையுள்ளதா? இங்குள்ள ஒடுக்குமுறை முதலாளித்துவ வாதிகள் கூறுவதுபோல் கம்யூனிஸத்தினால் தான் ஏற்பட்டதா? அல்லது கம்யூனிச சமுதாயத்தை நோக்கிய தவறான பாதை, திட்டமிட்ட வியூகங்களினால் இது நிகழ்ந்ததா..! என்ற கேள்விகள் இன்று சர்வதேசத்தியில், எழுப்பப்பெற்றிருக்கிறது.

www.tamilarangam.net






"தோட்டத் தொழிலாளர்களுக்கும் உணவு முத்திரை வழங்கப்படும்". இது ஒர் பத்திரிகைச் செய்தியாகும். இச் செய்தி எங்களை உணர்த்துகிறது, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட ஒர் மக்கள் கூட்டம் பொருத்தமற்ற ஒர் சலுகையைப் பெறப் போகின்றது என்பதையே. இது மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒர் சிறு சம்பவமே. இதைப்போல் பெறவேண்டிய பல அடிப்படைத் தேவைகளை, உரிமைகளை இழந்து கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக மலையகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நூற்றாண்டில், மலையக மக்களின் வரலாற்றை சோக வரலாறு என்றே சொல்லவேண்டும். வெள்ளையர்களால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட போது, கீத்கனி பரியான், கிளிரன் நடைக்கிளியால் சாகடிக்கப்பட்டுக் கொண்டே வந்தார்கள். தற்போதும் சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளால் சாகடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள்.

இலங்கையின் 'கடி மக்கள்' என்ற பெயரோடு

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட நிலையும், கள்ளத்தோணி, தோட்டக்காட்டான் என்ற புனைப்பெயர்களுடன், பங்கம்பி சுகாதாரவசதியற்ற லயன், தாழ்ந்த வாழ்க்கை சுகாதாரமற்ற சூழல் அசுத்த நீர்ப்பாவனை போசாக்கின்மை கடின உழைப்பு போன்றவற்றால் நோய்வாய்ப்பட்ட மக்களையும் குறைந்த ஆயுட்கால எல்லையைக் கொண்ட மக்களையும் வாழ்கின்றனர்.

"ஆசியாவில்" மட்டுமல்ல உலகிலேயே தேசிய மயமாக்கப்பட்ட மிகப் பெரிய தொழில் துறையாக இலங்கையின் தோட்-த் தொழிற் துறை விளங்குகின்றது. இதை தோட்டத் தொழிற் துறை மந்திரி அண்மையில் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார். உலகத்தின் "மிகப் பெரிய ஒரு தொழில் துறையில்" வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் மலையகத்தின் மோசமான காலநிலை தரையமைப்பு ஆகியவற்றின் மத்தியிலும் பட்டினியுடன் பெரும் மலைகளில் ஏறியிறங்கி வேலை செய்கின்றார்கள். இவர்கள் இலங்கை உழைப்பாளர்களாக கணித்து நாட் உயிரின் அடிப்படையிலே-யே வேலை வழங்குகின்றது. தேசியமயமாக்கப்பட்ட முதலாளித்துவ தொழி-ல் துறை நிறுவனங்களுக்கு உள்ள நடைமுறை சட்ட திட்டங்களுக்கு புறம்பான தொழில் நிபந்தனைகளுடனேயே வேலை செய்கின்றார்கள். இலங்-கையின் இன்றைய சமூக பொருளாதார அளவீட்டின்படி தோட்டத் தொழிலாளி ஒருவரின் சராசரி வருமானம் 700க்கும் 800 க்கும் இடைப்பட்டதே அதிகமான சந்தர்ப்பங்களில் சம்பள உயர்வுகள் வழங்கப்படும் போது இது தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இன்றைய நிலையில் தென்னிலங்கையின் அமைதியற்ற சூழலால் நேரடியாக பாதிக்கப்படுகின்றவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. பயங்கரவாத வன்செயல்கள் நடைபெறும் போது வேலைக்குச் செல்லவிட்டாலும் மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு சம்பளம் ஒழுங்காகக் கிடைத்து விடும். தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை செய்த நாட்க

www.tamilarangam.net



-ளுக்கு மாத்திரமே சம்பளம் கொடுக்கப்படுகிறது.

ஒருபுறத்தில் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளால் இன்னலுற்று அவல வாழ்வு வாழும் மலையகர்கள் இன்னொருபுறத்தில் காலத்திற்குக் காலம் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகளினாலும் மாண்டொழிகின்றார்கள். மலைய-கத்தில் ஏற்படும் மண்சரிவானது பிரித்தானியர்கள் தோட்டப்பயிர்ச்செய் -கைக்காக மலைகளில் இருந்த காடுகளை ஒழுங்கற்ற முறையில் அழித்ததன் மூலமே ஏற்படத் தொடங்கியது. மலைகளில் காடுகள் இருக்கும்போது காட்டு மரவேர்கள் மண்ணை கெட்டியாகப் பிடித்திருக்கும் தன்மையைக் கொண் -டிருக்கும். இக்காலப்பகுதியில் பெருமழை வெள்ளப்பெருக்கு ஏற்ப -டாதும் மண்சரிவிற்கான சாத்தியப்பாடுகள் இருக்கமாட்டா. தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பித்ததன் மூலம் மலைகளிலிருந்த காடுகள் அழிக் -கப்பட்டு பயன்படுத்தப்பட்டதன் காரணமாகவும் காட்டுமரங்க -ள் இல்லாதன் காரணமாகவும் தரை இறுக்கமற்ற உவர்த் தன்மை -யை அடைகிறது. இக்காலப்பகுதியில் பெருமழை வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது மண்சரிவுகள் ஏற்படுகின்றன.

இன்றைய நவீன தொழிற்துறையின் வளர்ச்சியால் முதலாளித்துவ நாடுகளில் கூட அரசுத் தொழில் -மயப் பிரதேசங்களின் தொழில்துறை போன்றவற்றில் ஏற்படும் -விபத்துக்கள், இயற்கை அழிவுகள் ஏற்பட்டால் அதை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்கான பல தற்பாதுகாப்பு விதிமுறைகளைக் -கையாளுகின்றனர். இச்சமகாலத்தில் உலகின் 'மிகப்பெரிய' தொழிற்துறையில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் மலையக -த்தின் இயற்கை அழிவுகளுக்கும் விபத்துக்களுக்கும் மத்தியிலும் உயி -ரைப் பணயம் வைத்தே வேலை செய்கின்றார்கள்.

கடந்தவருடம் நாடளாவிய

www.tamilarangam.net



பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சட்டம் ஒன்று (பிரஜாவுரிமைச் சட்டம்) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இன்று முதல் "மலையக மக்களே இந்நாட்டு மன்னர்களே" என மலையகத்தின் 'தனிப் பெருந் தலைவர்' உதிர்க்கின்ற கூற்று வானொலி, தொலைக்காட்சியிலும் ஒலித்து ஒலித்தது. 40 வருடங்களுக்கு முன்பு மலையகமக்களை நாடற்றவர்களாக்கியதும் தற்போது அவர்களை 'மன்னர்களாக்குவதும்' யூ.என்.பி. ஆட்சியே. 1940ம் ஆண்டுகளில் ஆரம்பித்த காலப்பகுதியில் மலையகமக்கள் போர்க்குணம் மிக்க கொண்ட போராட்ட எழுச்சி கொண்டவர்களாக இருந்தார்கள். இதனால் இடதுசாரி இயக்கத்துக்கு ஒத்துழைப்பு, அதன் மேல் அவர்கள் தேர்தலில் பற்பல தொகுதிகளில் வென்றமை, தொழிற்சங்க இயக்க அமைப்பு, அதன் மேல் தோட்ட நிர்வாகிகளை கதிகலங்கவைத்த போராட்டங்கள், சிலசமயம் தேசியரீதியான வேலைநிறுத்தங்களில் சிங்களத் தொழிலாளர்களோடு இணைந்து சாதனை அமைத்த. திணறவைத்த போராட்டங்கள், சிங்களவர்க்கு அடுத்த பெரும்பான்மையாக இருந்த தன்மை ஆகியவற்றினாலேயே நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். தற்போது மேற்குறிப்பிட்ட தன்மைகள் அற்ற நிலையிலேயே பிரஜாவுரிமை கொடுக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளார்கள்.

பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் நாடற்றவர்கள் என்றபிரச்சினை தீர்ந்துவிட்டதா? கடந்த வருடம் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டபின் பிரஜாவுரிமைக்கென்று அனுப்பப்பட்ட எத்தனையோ விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு மீண்டும் விடை தேடிச் சென்றுள்ளது. அத்துடன் மலையகத்தின் படித்த இளைஞர்களில் கணிசமானோர் அரசாங்க உத்தியோகங்களுக்கும் அரச கூட்டுத்தாபன வேலைகளுக்கும் விண்ணப்பங்கள் செய்து நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பொழுது நீங்கள் இந்தி

www.tamilarangam.net



கைப் பிரஜா உரிமையைக் கூறி அதிகாரிகள் அவர்களைத்
திருப்பி அனுப்பியுள்ளார்கள். நேர்முகப் பரீட்சைக்கு சென்றவர்க
ளிடம் மேலதிகாரிகள். "நீயெல்லாம் இந்தியன் டெமிழ்" எங்கே
கிட்டுவன்" என்றெல்லாம் கேட்டார்கள். தேர்தல் காலம் நெருங்கு
ம்போது மக்களுக்கு சாதகமான சட்டங்களை இயற்றுவதும், வாக்
குறுதிகளைக் கொடுப்பதும். வழமையாகிப்போன அரசில் இயற்றப்படும்
சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் ஏமாற்றுவதும். சட்டப் புத்தகங்
களிலும் உறங்கிக்கொண்டிருக்கின்றது.

மலையகப் படித்த இளைஞர்களுக்கு
தொழிலின்றியும் பிரஜாவுரிமை பிரச்சினைகாரணமாக அரச உத்தி
யோகங்களுக்கு நியமனம் பெறமுடியாத நிலையிலும் மலையக ஆசிரியர்
நியமனத்தில் மலையகப் படித்த இளைஞர்களுக்கே முன்னுரிமை கொடுக்
கப்பட வேண்டும் என்ற அரசின் சுற்றறிக்கை ஒழுங்கான நடைமுறை
ப்படுத்தப்படவில்லை. அரசியல் தலையீடு, லஞ்சம் போன்றவற்றின்மேல்
வெளிமாகாணத்தவர்கள் உள்ளெடுக்கப்படுகின்றார்கள். வெளிமாவட்
டத்தவரின் உள்ளெடுப்பை எதிராக "மலையக இளைஞர் பொறுமையைச்
சோதிக்காதே" "மலையக ஆசிரியர் நியமனத்தில் மலையகத்திற்கு முன்
னுரிமை கொடு" என்ற கோசங்களுடன் இளைஞர்கள் ஆர்ப்பாட்டங்
களை நடத்தியிருக்கின்றார்கள்.

இன்றைய மலையக இளைஞர் சமுதாயம் மலை
யகத்தை இழிவான நிலையிலிருந்து மீட்டெடுக்கத் துடிக்கின்றது. பழை
ய நடைமுறைகளைக்கொண்ட மார்க்கங்களிலிருந்து விடுபட்டு
அரசியலில் அக்கறை கொள்ளாத நிலை தங்கள் பிரச்சினைகளுக்
கு இந்தியா செல்வதே மார்க்கம் என்ற பழைய சிந்தனையின் போக்
கிலிருந்து விடுபட்டுள்ளனர். தமக்கு மறுக்கப்பட்டுள்ள தேவைகள் உ
ரிமைகளைத் தட்டிக்கேட்கும் நிலைக்கு வந்துள்ளனர். "மலையக
மக்களுக்கு சொந்தமாக காணிகள் வீடுகள் வழங்கப்பட வேண்டும் காணி

www.tamilarangam.net



# நாம்

நாமும் பிணங்களை
நல்லடக்கம் பண்ண
ஆண்கள் அங்கே இல்லை
சடலை அறியா பெண்கள்
சுடுகின்றனர் பிணங்களை
என தெரிந்தும்

மொட்டான உடைகளுடன்
கட்டாக நோட்டுக்களை
கல்யாணத்தில் விட்டு
கண்காட்சி போல்
களியாட்டம் பண்ணுவதால்
எட்டாத உயரத்தில்
ஏறிவிட்ட சந்தோசம்!

சோற்றுக்கு வழியின்றி
சொந்த நாட்டில் மக்கள்
தலை தெறித்த போதையிலே
இந்த நாட்டில் நாங்கள்!
எடுத்துச் சொல்ல வருவோரோடு
நடத்திக் கூறும் தந்திரம் பல.
இருந்தாலும் சிலர் நெஞ்சில்
பதிந்தாக பல விதைகள்!


• யதார்த்தினி •

---

தள் பகிரங்கமாகப்படும் போது. மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான ஆர்ப்பாட்ட இயக்கங்கள் முன்னெடுக்கின்றார்கள். அரசின் அடக்கு முறைக்கு எதிராக சிறுசிறு போராட்டங்கள் முன்னெடுக்கின்றனர். இந்நடவடிக்கையானது தாங்கள் சொந்தக்காலில் நிற்கவேண்டும் என்ற நோக்கில் அமைவது தென்படுகிறது. இந்நிலையில் உணர்வு பெறும் மலையக இளைஞர்கள் ஜே.வி.பி. போன்ற பாசிச இயக்கங்களிலோ அல்லது 'முற்போக்கு' பேசும் மதநிறுவனங்களின்பாலோ கவரப்பட வாய்ப்புக்களுண்டு. இதேசமயம் வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும், மலையக மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் வித்தியாசமானது. என்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு மலையக இளைஞர்களும் தமக்கு எதிரான ஒடுக்குமுறையை சரியாகப் புரிந்து கொண்டு சுயாதீன இயக்கங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

• கேன்

www.tamilarangam.net




T. தயாநிதி, நொர்வே: மின்னல்-1 வாசித்தேன். அட்டைப்படத்தில்; இந்திய இராணுவத்தின் காலடியில் மிதிக்கப்படுவது தமிழ் மக்கள் மட்டுமல்ல. சிங்கள மக்களுமே. அத்துடன் இந்திய இராணுவம் மட்டும் மிதிக்கவில்லை ஏனைய கும்பல்களும் மிதித்துக் கொண்டே இருக்கின்றன.

• ஒவ்வொரு குறிப்பான பிரச்சனைகளிலும் உள்ள முரண்களைக் கூட வெளிப்படுத்துவதே வாசகனின் சிந்தனையை இலகுவில் சென்றடையக் கூடியது என்பதே எமது கருத்து. (அட்டைப்படத்தில்)

- ஆசிரியர்குழு.

K. தயாபரன், 5160 டூரன், மே.ஜேர்மனி: தங்கள் மின்னல் 1 படித்தேன். தங்கள் பத்திரிகையின் வெளியீடு பற்றி ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கு ஓர் அறிமுகப் பிரதி அனுப்புவீர்களேயானால் அவர்கள் தங்கள் சஞ்சிகையில் நூல் அறிமுகப் பகுதியில் பிரசுரிப்பார்கள். இதை ஏனைய வாசகர்களும் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். நல்ல ஆக்கங்களும் உங்களுக்கு கிடைக்கும்.

சிறீதரன், மே.ஜேர்மனி: சிவப்பு மின்னல்களுக்கு விசேட பாராட்டு. எமது நாட்டின் இன்றைய யதார்த்த நிலைமையைக் கவிதை வெளிப்படுத்துகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதம்

# புதிய குழப்பங்கள்

மதமாற்றம் என்னும் பித்தலாட்டம் ஐரோப்பாவுக்கு வந்த காலத்தில் இங்கே தமிழரிடையே இழையோடிய போதும், இன்று குறிப்பாக தமிழ் இனத்திடையே பெரும் ஆளுமையைச் செலுத்த ஆரம்பித்துள்ளது. இது தனிமனிதரீதியில் சில வேதனைக்குரிய விளைவுகளைக் கொடுக்கின்ற அதே வேளை சமுதாயரீதியில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

தன் சொந்தக் குழந்தையை சூடேற்றப்பட்ட ஸ்திரிப்பெட்டியினால் (IRON BOX) அழுத்தி கொலைசெய்ய முயற்சித்தான் அவன்.

"சனியன்களை ஒழிக்கவேண்டும் இல்லையேல் வாழ்க்கை துன்பமாகத்தான் இருக்கும்" என்று போதிக்கப்பட்ட மதப்பிரச்சாரத்தினால் பைத்தியமாக்கப்பட்ட ஒரு தமிழ் தாயின் முடிவுதான் இது. இச் சம்பவம் ஒரு சில வருடங்களுக்கு முன் மேற்கு ஜேர்மனியில் நிகழ்ந்தது.

சென்ற வருடம் போண் மாநிலத்தில் 'ரெக்வில்' என்ற இடத்தில் ஓர் தமிழ் இளைஞரின் கால்பாதத்தில் ஏற்பட்ட நோய்க்கு சத்திரசிகிச்சை செய்தால்தான் குணப்படுத்தமுடியும் என்பது டாக்டரின் வேண்டுகோள். இல்லை செபம் செய்தே

www.tamilarangam.net



மாற்றிவிடலாம் என்று ஜென்னியும் அவரைச் சார்ந்தோரும் கருதினார். நாட்கள் இழுபட்டன. நோய்க்குரிய பக்ரீரியா மேல்நோக்கிப் பரவிக்கொண்டே சென்றது. பின்பு; கெண்டைக்காலுடன் துண்டிக்கப்பட விருந்த அவ் இளைஞனின் கால், பக்ரீரியா மேல்நோக்கிப் பரவியதால் முழங்காலில் துண்டிக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்தின் 'செங்காலன்' (St.gallen) மாநிலத்தில் சென்ற 28.10.89 ல் சனிக்கிழமையன்று, இலங்கையில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட மகேஸ்வரன் என்றழைக்கப்படும் வாலிபன் ஓடும் ரயில் முன் நின்று உயிரை மாய்த்துக்கொண்டார். "பாவம் சில வாரங்களுக்கு முன்புவரை தெளிந்த மனநிலையுடன் இருந்தானே இவன் உள்ளம் எப்படி திடீரென்று மனோ வலிமையை இழந்தது? எல்லாம் அந்த ஜென்னியும் சாது செல்லப்பாவும் செய்த வேலைதான்" என்று நண்பர்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது.

மேற்கூறப்பட்ட சம்பவங்களுக்கெல்லாம் மத மாற்றம்தான் காரணம் என்று மொட்டையாகக்கூறுவது நமது நோக்கமல்ல. அதேவேளை ஜென்னி, சாது செல்லப்பா போன்றவர்களது மதப்பிரச்சாரங்கள் சிந்தனைப்போக்கில் குழப்பத்தை உண்டுபண்ணி சமூகத்திற்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களையும் இளைஞன் மகேஸ்வரனின் மரணத்தை எப்படித்துரிதப்படுத்தியது என்பது பற்றியும் சமுதாய ரீதியாக அனுபவங்கள் மூலம் ஏனைய இளைஞர்களின் சிந்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிப்போக்கை ஓரளவு செழுமைப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் இக்கட்டுரையைத் தொடர்கிறேன்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் நாம், முற்றிலும் அந்நியப்பட்ட மனோபாவம் (Mentality) கொண்டவர்கள் மத்தியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சிதைந்திருக்கிறோம். சமுதாய உறவுகள் துண்டிக்கப்பட்ட நிலையில்; சொந்தங்களுடன், உற்றார் உறவினருடன் கூட்டு வாழ்க்கையில் பழக்கப்பட்ட நாம், இங்கு வேதனையுடன் தனிமை வாழ்வில் ஈடுபடுகிறோம். உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அனுபவிப்பதாக நாம் நினைத்தபோதும், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய ஏக்கம்; வயோதிபத்தை அடைந்துவிட்ட பெற்றோரை நினைத்து, இறுதிக்காலத்தில் அருகில் இல்லையே என்ற கவலை மிகுந்த உணர்வுகள்; மன அமைதியைக்குலைக்கிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று கனடாவுக்கும் அங்கும் இங்கும் என்று உள்ளத்தில் அலை மோதுகிறது. சரி, சொந்த மண்ணில் சமுதாய உறவுகளைப் பேணி மன அமைதியுடன் வாழ்வோம் என்று நாடு செல்ல நினைத்தால்....?

இப்படியாக அனைத்திலும் நம்பிக்கையிழந்து விரக்திக்குட்படுத்தப்பட்டு ஆன்மீகப்பலம் குன்றியிருக்கும் எம்மவரின் சிந்தனையில் குழப்பம் விளைவிக்கிறார்கள் சாது செல்லப்பாவும் ஜென்னி போன்றோரும்.

"ஆன்மா தனித்து நின்று எதையும் செய்யமுடியாது கடவுளின்துணை ஆன்மாவுக்கு அவசியம். இராமாயணத்தின் உட்பொருள் இதைத்தான் எடுத்துப் போதிக்கிறது"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படிப்போதித்து எம்மீது நாம் வைத்திருக்கும் சொற்ப நம்பிக்கையைக்கூட இழந்துவிடச் செய்யும் வகையில் எம்மைப் பலவீனப்படுத்த ஆரம்பிக்கும் சாது செல்லப்பா தொடர்ந்து.......

1. கடவுள் நம்புங்கள் மதங்கள் நம்பாதீர்கள்.
2. வேதங்கள் (இருக்கு யசுர் சாமம் அதர்வணம்) உபநிடதங்கள் பைபிள் நம்புங்கள்; புராணங்கள் நம்பாதீர்கள்.
3. யேசு டிசம்பரில் பிறக்கவில்லை அக்டோபரில் தான் பிறந்தார்.
4. அப்பர் சுவாமிகள் யேசுவைத்தான் பாடினார் சிவபெருமானை அல்ல.
5. திருநீறுபூசிப் பொட்டுவைக்கும் எமது பழக்கங்கள், யூதமதத்தில் இருந்துதான் வந்தது. இந்து மதத்தில் இருந்து அல்ல.
6. விக்கிரக வணக்கம் எகிப்தில் இருந்துதான் வந்தது.
7. பூமியை உருண்டை என்று கண்டுபிடித்த கலிலியோவை விஞ்ஞானி என்று கூறமாட்டேன் அது ஏற்கனவே பைபிளில் உள்ளது.
8. மூன்றாம் உலகப்போர் எப்போ? எங்கே? தொடங்கும் எந்தெந்த நாடுகள் அதில் பங்கெடுக்கும் என்பது பைபிளில் கூறப்பட்டுள்ளது.
9. உலகின் தென்பகுதி மக்கள் ஏன் கஸ்டப்படுகிறார்கள்? நோவாவினால் சபிக்கப்பட்ட காம் என்பவன் அங்கு சென்றதனால்தான்.

இப்படியாக விஞ்ஞானத்திற்கும், வரலாற்றிற்கும் முரண்பட்ட

www.tamilarangam.net



கருத்துக்களை முன்வைத்து தருவதிலும் தம்மை ஓர் மேதாவியாகக் காட்டுகின்றார். தான் சார்ந்திருக்கும் மதத்தைத்தவிர ஏனைய மதங்களைப்பற்றி பிழையான விளக்கங்களையும், பொய்யான தகவல்களையும் கொடுக்கிறார்.

ஏற்கனவே அறியப்பட்ட விசயங்களை நாம் எதிர்பாராதவிதத்தில் பொய்யாக்கி, தாம் கூறுவது மட்டும்தான் மெய்யானது என்பதன் மூலம் எம்மைக்குழப்பி, மூளையில் மேலும் பலவீனத்தை ஏற்படுத்தி "நான் யேசுவின் சாட்சியாக வந்துள்ளேன் என்னை நம்புங்கள்" என்று உரத்துக்கத்துவதன்மூலம் கருத்துக்களை மூளையில் திணிப்பதற்கு வேண்டிய பலவீனத்தையும், சூழலையும் உருவாக்கி எம்மவரை மூளைசலவைக்கு (Brainwash) உட்படுத்துகிறார். ஹென்றி போன்ற ஏனைய மதவாதிகளும் இதே மூளைச்சலவை முறையைத்தான் ஏனைய முறைகளில் மேற்கொள்கின்றனர் என்பது கவனிக்கப்படவேண்டிய விசயமாகும்.

கஸ்டங்கள், துன்பங்கள் மத்தியில் ஆன்மீகப்பலமிழந்து விஞ்ஞான அறிவுவளர்ச்சிக்கும், சிந்தனைப்போக்கிற்கும் உட்படாத .. நிலையில் மக்களின் மன அமைதிக்கு இறை வணக்கங்கள் உதவுகின்றனதான். ஆனால் அது தற்காலிகமானது மட்டுமே. ஏனெனில் புறநிலைகள் கஸ்ட, துன்பங்கள் உருவாகும்போது அகம் நிலையான அமைதியை பேணிவிடமுடியாது.

நாத்திகனாக இருப்பதும், மதம் சார்ந்தும், சாராமல் இருப்பதும், மதம் மாறுவதும் தனி

www.tamilarangam.net



மனித சுதந்திரத்துக்குட்பட்ட விசயங்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் எமது இளஞ்சந்ததியின் சிந்தனைப்போக்கை மடமாக்க முயற்சிக்கும். இவர்களின் கபடத்தனங்களும் சாது செல்லப்பாவையும், ஜெனன்னி போன்ற இன்னும் பல மதப்பிரச்சாரர்களையும் பேசவைக்கும் பின்னணிகளின் கள்ளத்தனங்களும் சமுதாய நலன்களில் அக்கறை கொண்ட ஒவ்வொரு மனிதனையும் ஆத்திரமுறச் செய்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வறுமை பெரும் போராட்டங்களை உருவாக்கிவிடும் என்றும், இதன் விளைவாக அந்நாடுகளில் அமையும் தேசிய அரசுகள், தமது தொடர்ச்சியான அரிப்புக்கும், சுரண்டலுக்கும் தடையாக இருக்குமென்றும், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா உள்ளிட்ட மேலாதிக்க வல்லரசு நாடுகள் அச்சமடைகின்றன. ஆகையினால் மூன்றாம் உலக நாடுகளில் தேசிய அரசுகள் உருவாகுவதைத் தடுப்பதற்கு பல விதங்களில் திட்டமிடுகின்றன. இத்திட்டங்களில் ஓர் அங்கம்தான் மூன்றாம் உலகநாடுகளைச் சேர்ந்த மக்களிடம் மதப்பிரச்சாரங்களை மேற்கொள்வதும், புதிய புதிய மதங்களை அறிமுகம் செய்வதும் மக்களை மதங்கள் மேல் நம்பிக்கைகொள்ளச் செய்வதுமாகிய அனைத்து நடவடிக்கைகளும் ஆகும்.

ஆன்மீகரீதியான இம்முயற்சிகளையும் மீறி போராட்ட சக்திகள் வளர்ச்சியடையும்போது

www.tamilarangam.net



வெறுவிதமான தந்திரங்களைக் கையாளுகின்றன இவ் மேலாதிக்கவல்லரசுகள். அவற்றில் பிரதானமானவை;

I. போராட்டக்குழுக்களின் சக்திக்கு மேலான வளர்ச்சியைத் துரிதப்படுத்தி அதிதீவிர அராஜகப்போக்குக்கு உட்படுத்தி அவர்களை அழியச்செய்தல்.

II. போராட்டக்குழுக்களிடையில் முரண்பாடுகளை வலிமைப் படுத்தித் தம்மைத்தாமே அழித்துக்கொள்ள வழி வகுத்தல்.

III. போராட்ட இயக்கங்களுக்குப் பொருளாதார ஆயுத உதவிகளைச்செய்து தம் நலன்பேணும் கைக்கூலிகளாக மாற்றுதல்.

இத்திட்டங்கள் யாவும் இந்தியா, ரஷ்யா, மேற்குஐரோப்பா உள்ளிட்ட மேலாதிக்க வல்லரசுகளினால் ஈழப்போராளிக்குழுக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட கபடத்தனங்கள் ஆகும். மேற்கு ஐரோப்பிய மத நிறுவனங்கள் பல, அகதிகளுக்கு என்ற பெயரில் தமது கைக்கூலி இயக்கங்களுக்கு லட்சக்கணக்கில் பணமனுப்பியமை சகலரும் அறிந்ததே. இக்கபடத்தனங்களின் விளைவு வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி மலையகமக்களும் போராட்டங்களில் நம்பிக்கை இழந்துள்ளனர். இச் சந்தர்ப்பத்தையும் தமக்குச்சாதகமாக்கிக்கொண்டு மேற்குலக நாடுகள் எம்மக்களிடம் மதப்பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்த ஆரம்பித்துள்ளன. மேலும் நேர்மையான நிதானமான போராட்ட சக்திகள் தோன்றுவதைத் தடுப்பதே இவ்வல்லரசுகளின் நோக்கமாகும்.

www.tamilarangam.net



இந்தியாவின் சென்னை நக
ரில் இருந்து சாது செல்லப்பாவும், லண்டனிலிருந்து
தமிழ் நங்கை ஜென்னியும் "யேசுவின் சாட்சியாக"
தன்னிச்சையாக எழுந்து வந்தவர்களா? இல்லை---
மேற்கு ஐரோப்பிய மேலாதிக்க வல்லரசுகளின் மத
புதகளாக் காவிவந்து எம்மிடம் ஊதுகிறார்கள்.
இந்த... உண்மையை சாது செல்லப்பா அவர்களே
எமக்கு ஆதாரப்படுத்துகிறார். தனது வீட்டுவாட
கையையும், தமது செயலாளர்க்குரிய சம்பளத்தை
யும் மேற்கு ஜேர்மனியில் உள்ள ஒரு ஜேர்மனி
யர்தான் தமக்கு வழங்குவதாகவும், தேவைப்படும்
புத்தகங்களுக்குரிய பணத்தை இவ் ஜேர்மனியரின்
முகவரிக்கு அனுப்பும்படியும் சாது செல்லப்பா கேட்
டுள்ளார். அனைத்தும் அரசின் ஆதரவு பெற்ற ஒரு
நிறுவனத்தின் ஊடாகவே நிகழ்கின்றன. என்பதை நாம்
கணக்கிட நேரம் அதிகம் ஆகாது. ஒருபுறம் ஆன்மீகப்
போதனைகள் மறுபுறம் மனிதஉயிர்களின் அழிவுக்கான ஆயு
தக்கொடுப்பனவுகள்; ஆகிய இரண்டு முரண்பட்ட அம்சங்க
ளையும் மேலாதிக்க வல்லரசுகளே திட்டமிட்டுச் செய்கின்றன.

[மேற்கொண்டு "கடவுளை நம்புங்கள் மதங்களை நம்பா
தீர்கள்" தொடக்கம் "மூன்றாம் உலகயுத்தம் எப்போ எங்கே
ஆரம்பிக்கும்" என்பது வரையிலான பற்றைக்குள் யானையை
மறைக்கும் சாது செல்லப்பாவின் கூற்றுக்கள் எந்த
அளவுக்கு உண்மையானவை என்பதுபற்றி அடுத்த இத
ழில் விவாதிப்போம்.]

▲ வி. லோகதாஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை!

— ஆனந்த சுரேஷ் —

பெண்ணினமே
விழித்தெழுங்கள்!
எரிமலைகள்
ஓர் நாள் வெடித்தே தீரும்!

சீதா
அரக்கர்களிடமிருந்து
தப்புவதற்கு
இன்னும் இன்னும்...
மருந்துப் போத்தல்களும்...
தூக்குக் கயிறுகளும்...
பாழுங் கிணறுகளும்...
இல்லையில்லை...

எரிமலைகள்
ஓர் நாள் வெடித்தே தீரும்!

பொங்கியெழுங்கள்
சீதைகளாய்
நெருப்பில் குதிக்க அல்ல;
கண்ணகிகளாய்
அந்த
அரக்கர்களை எரிக்க
ஆமாம்... எரிமலை
ஓர் நாள்
வெடிக்கத்தான் வேண்டும்!

மனிதம் இரு மாதத்துக்கு ஒருமுறை

சந்தாவிபரம்:

ஒரு பிரதி — 2 SFr
ஒரு வருடத்துக்கு — 15 SFr (தபாற்செலவு உட்பட)

ஐரோப்பிய நாடுகளுக்கு:

ஒரு வருடத்துக்கு — 18 SFr (தபாற்செலவு உட்பட)

• ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் தொடர்பு கொண்டு சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

தொடர்புகட்கு:

**Manitham**
Zentrum 5 (Z 5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
SWITZERLAND

பணம் அனுப்புவதற்குரிய வங்கி: SPAR KONTO:157146601
"BüCHER VERKAUF"
SCHWEIZERISCHE KREDIT ANSTALT
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீண்டும்...
## மனிதம் வீழ்ந்தது!

இழவு நடந்த தேசத்தில்
உதிரும்
சோகத்தின் கண்ணீர்த்துளிகள்!

எங்கள் தேசத்தில்
எங்கள் சமுதாயத்தில்
எங்கள் மக்களிடம்
கற்ற கல்வியை
காசுக்கு விற்கும்
புத்தி ஜீவிகள்
அந்நிய நாடுகளில்.

இராணுவ ட்ரக்குகளுக்கும்
இயந்திர வாகனங்களுக்கும்
வழி விட்டு விரிந்து கிடக்கும்
வீதிகள்...

சனங்களோ இல்லாத
சந்திகள்...
மரணத்தின் பயங்கரத்தை
அறிவிக்கும்
சப்பாத்து கால்களின்
கனத்த ஒலி கேட்கும்

அந்த கொடிய
மாலைப் பொழுதில்
நீ சுடப்பட்டாய்!

பெண் என்றால்
பேயும் இரங்கும் என்பர்.
ஆனால் இவர்கள்....

துப்பாக்கி வைக்கலாம் யாரும்...
கொலை செய்யலாம்
யாரும்... யாரையும்...
இதுவே விதியாகிப் போன
எங்கள் தேசத்தில்
எமக்குத் தெரியாது என்று
அறிக்கைகள் வரும்.

இத்தனையும் செய்து விட்டு
சுகமாய் விடுதலைக் கென்று
இன்றும் எங்கள் காதுகளில்
பூக்கள் சுற்றப்படும்;
உண்மை மனிதர்கள் வீழ்த்தப்படுவர்
நாளையும்...
நாம் விழிக்கும் வரை!

(படுகொலை செய்யப்பட்ட
ராஜினியின் நினைவாக)